விவேகபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ மார்கழி௴ : : 1920-௵ ஜனவரி௴ | பகுதி 7

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

இற்றன ரரக்கர் தானை யிருபது வெள்ளத் தோடும்
செற்றவா ளரக்கன் கேட்டான் மைந்தனைச் சேறி
[யென்றான்
மற்றவன் தேரி லேறி வானரப் படையைச் சேறி
எற்றுவ னினியென் றெண்ணி யிலக்குவன் றன்னோ
[டேற்றான்.

அறுபது வெள்ளத் தானை யாயிரந் தேரினோடும்[றும்
வெறுவது செய்யக்கண்டு மயன்படை விடுவேனென்
உறுவலி யரக்கன் வானத் தொளித்ததை யோரான்
[றம்பி
எதிபடை பூசைசெய்வா னெழுந்தன னிராம னிப்
[பால்.

உரைத்தன னிராவணி யிராவணற் குற்றவா றெல்
[லாம்
வரைப்புய மகோதரன் வருகவென் றேவினன் வலத்
[தால்
குரைத்தெழும் வானரக்குழுவை வென்றிலக்குவன்
[சரத்தால்
பொருக்கென வெழுந்தன னந்தர விசும்பிடைப்
[போனான்.

முட்டின மகோதரன் முனிவரு மமரர்களாகச் [றான்
சிட்டனீ தென்னைகொ லென்றனாந் திகைத்தன னின்
விட்டன னயன்படை யிராவணி யிலக்குவன் மீதே
பட்டனன் பட்டவா றிராவணற் குவகையிற் பகர்ந்
[தான்.

எய்ந்தெழி லிராகவ னிலக்குவன் பாடுகண் டேங்கிச்
சாய்ந்தனன் சாம்புவன் மாருதி தருதியா லென்னப்
பாய்ந்தனன் மருந்துகொண் டமரிடை யயனது
[படையால்
ஓய்ந்தவர் யாவருமுயிர்த்தனர் தூதர்போ யுரைத்தார்.

யாவ திங்குநாஞ் செய்வதென் றியம்பலு மைந்தன்
ஆவ துண்டென வரக்கனு மதுசெயென் றடைந்தான்
தேவிசீதையாச் சமைத்தபின் னனுமன்முன் சிதைத்
[துப்
போவ னனயோத் தியிலென நிகும்பலை புக்கான்.

ஆய வாறெலா மநுமன்வந் திராகவற் கறைய
மாயை யேயென வீடணன் விளக்கின தென்றான்
ஏய காரியஞ் செய்திரென் றெழுந்தன னெம்மான்
போயெர் மாயையால் வீடண னிலங்கையிற் புக்
[கான்

ஆனயாயைகண் டறிந்துவந் தரக்கர்கோ னுரைப்ப
வானரேசனு மிளவலும் வடதரு நீழல்
சேனை சூழ்தர நிகும்பலை வேள்வியைச் சிதைத்தே
போன போதெதி ரிந்திர சித்தயர் புரிந்தான்.

கறுத்திராவணி விடுங்கணையெலாம் விடுகணையால்
இறுத்தொ ரம்பினாற் கையுடன் வில்விழ வெய்தான்
குறித்தொர் சூலத்தர் விலக்குவ னுயிர் கொளக் கொ
[தித்தான்
அறுத்தொ ரம்பினா லவன்றலை கொண்டன னகன்
[றான்

அடுத்துரைத்தனர் தூதவ ரரக்கர்கோன் களம்புக்
கெடுத்திரங்கினன் மதலைதன் றலையிலா யாக்கை
படுத்தனன் றயி லத்திடை மூலமாப் படையும்
விடுத்து வந்தடி பணிந்தன ராயிர வெள்ளம்.

மூலத் தானையை யிராமன் மேல் முடுக்கித் தான்
[குரக்குக்
கூலத் தானைமேற் சென்றன னிராவணக் கொடி
[யோன்
மூலத்தானைசென் றிராமனை முடுக்கலுங் குரக்குக்
கூலத் தானைபோ யிரிந்தன குரைகடற் கப்பால்.

வேர்த்திருந்தவக் கவியெலா மங்கதன் மீட்பக்
காத்தி நீயெனத் தம்பியைக் காவலா விடுத்தே
ஆர்த்த வெம்படை யாயிர வெள்ளமு மடியக்
கோத்த வம்பினா லேழரை நாழிகை குறைத்தான்.

அத்தனசிலை யிளவலோ டரக்கர் கோனடர
வித்தினன் சரம் பலப்பல விளவலும் விட்டான்
எத்தினன் னெடுமோகமாப்படை தொடுத்தெய்தான்
அத்த னச்சர மாழியான் சரத்தினா லட்டான்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ மார்கழி௴ [ப. 7

யுதிஷ்டிரர்
YUDHISHTIRA

ஸபையோர் துச்சாஸனன் மாண்டானென நிச்சயித்து, பீமனைக் கொண்டாடினார்கள். அப்பொழுது விதுரர் "ஸபையோர்களே, விகர்ணன் தனக்குத் தெரிந்தவரையில் திரௌபதியின் கேள்விக்கு மறுமொழி சொன்னான். நாமும் அப்படிச் செய்யாவிட்டால், பொய் சொல்வதாலுண்டாகும் பாபத்தில் பாதி நம்மைத் தொடரும். தர்மத்தை அறிந்தும் பிசகாய் மறுமொழி கூறினால் பொய்யின் முழுப் பயனையும் அடைவீர்கள்" என்றார். அப்பொழுதும் அவ்வரசர்கள் ஒன்றும் சொல்லவில்லை. கர்ணன் "இந்த தாஸியை நமது வீட்டிற்கு அழைத்துப் போ"வென்று துச்சாஸனனைக் கட்டளையிட்டான். அவனும் அவளை இழுக்கப் பாஞ்சாலி கைகளைத் தூக்கிக்கொண்டு "பெரியோர்களே ! வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லலாகாதா? பெண்ணென்றால் பேயுமிரங்கும். என்னைப்போன்ற பெண்களும் பார்யைகளும் ஸஹோதரிகளும் நாட்டுப்பெண்களும் உங்களுக்கும் உண்டு. இதைக் காட்டிலும் கோரமான கதி அவர்களுக்கு நேரமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். நான் தாஸியா அல்லவா? எனக்குத் தெரியாமல், என் ஸம்மதமில்லாமல், யுதிஷ்டிரர் தன்னையும் தோற்று ஸ்வாதீனமற்றபிறகே என்னைப் பந்தயம் வைத்து ஆடினது நியாயமா ?" என்றாள்.

அதைக்கேட்ட பீஷ்மர், "மகா ஞானிகளும், தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அறிவது கஷ்டம். பலவான் எதைத் தர்மமென்று நினைத்துச் செய்கிறானோ, அதை மற்றவர்கள் மறுக்க முடியாது. ஆகையால், உன் கேள்விக்கு மறுமொழி சொல்லத் தோன்றவில்லை. ஆனால் இந்தக் குலத்திற்குச் சீக்கிரத்தில் நாசம் வரத் தகுந்தகாரியங்களைக் கௌரவர்கள் செய்துவருகிறார்கள். எவ்வித ஆபத்து நேர்ந்தபோதிலும், நீ தர்மத்தை விடக்கூடாது. யுதிஷ்டிரனே உன் கேள்விக்குத் தகுந்த மறுமொழியைச் சொல்ல வேண்டுமெ"ன்றார். துர்யோதனனும், அதை ஒப்புக்கொண்டு, "உன் விஷயத்தில் யுதிஷ்டிரனுக்கு யாதொரு பாத்தியமுமில்லை யென்று பெரியோர்களுக்கு முன்பாக அவன் சொல்லட்டும். எல்லோரும் தர்மராஜாவைப் பொய்யனாகச் செய்யட்டும். அப்பொழுது நீ அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவாய். தர்மபுத்திரன் உனக்கு அதிகாரியா, அல்லவாவென்றுதானே சொல்லட்டும். அதன்படி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேனெ"ன்றான். சபையோர்கள் வெகு ஆவலுடன் பாண்டவர்கள் என்ன சொல்லப் போகிறார்களென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது பீமஸேனன், "ஸபையோர்களே! இந்த யுதிஷ்டிரர் எங்களுடைய புண்யங்களுக்கும், தவங்களுக்கும் உயிருக்கும் அதிகாரி. அவர் தம்மைத் தோற்றதாக நினைத்தால் நாங்களும் தோற்றவர்களே. ஆனால், பாஞ்சாலியை இப்படி சபையில் மானபங்கம் செய்த பிறகு கௌரவர்களை நான் உயிருடனிருக்க விடமாட்டேன். தர்மத்தாலும், தர்மபுத்திரரிடத்திலுள்ள மரியாதையாலும் அர்ஜுனனாலும் தற்காலம் தடுக்கப்பட்டிருக்கிறேன். தகுந்த சமயம் வரும்பொழுது, என் பிரதிக்ஞையை நிறைவேற்றுகிறேனெ"ன்றான்.

அப்பொழுது துர்யோதனன் பாஞ்சாலியை இன்னும் அவமானஞ் செய்ய வேண்டுமென்ற கருத்துடன், இடது துடையைக் காட்டி "நீ இதில் வந்து உட்காருவதே உனக்குத் தகுந்த காரியமெ"ன்றான். அதைக்கேட்ட பீமஸேனன் இடிபோல் சிரித்து, "இந்தத் துடையை என் கதையால் முறிக்காவிட்டால், என் முன்னோர்கள் சென்ற புண்யலோகங்களுக்கு நான் செல்லாதிருக்கக் கடவேனெ"ன்று கோரமாய்ப் பிரதிக்ஞை செய்தான். அர்ஜுனன் "மகாத்மாவான தர்மராஜா முதலில் எங்களைப் பந்தயம் வைக்கும்பொழுது அதிகாரமுள்ளவராயிருந்

தார். அவர் தம்மைத் தோற்ற பிறகு, யாருக்கு அதிகாரி யென்பதைக் கௌரவர்கள் யாவரும் அறியுங்களே"ன்றான். கர்ணன் "வெகு நேரம் இவர்களுடன் என்ன பேச்சு? துர்யோதனா! நீ இவளைத் தாஸியாக வைத்துக்கொண்டு உன் இஷ்டப்படி செய்"யென்றான். துச்சாஸனன் திரௌபதியை மறுபடியும் இழுத்துக்கொண்டு போக ஆரம்பித்தான். அவள் அநாதையாய்க் குந்தியையும் காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் பார்த்து, கண்ணும் கண்ணீருமாய்க் கதறினாள்.

விதுரர் எவ்வளவு தடுத்தும் கௌரவர்கள் கேட்காமல், பாஞ்சாலியை மறுபடியும் ஹிம்ஸிப்பதைப் பார்த்துப் பீமன், "இந்தத் துர்யோதனனைப் பெரும்போரில் ஜயித்து, இவனுடைய துடையைக் கதையால் ஒடித்துத் தரையில் விழுந்த இவன் தலையைக் காலால் மிதிப்பேன். இந்தக் கொடிய பாபியான துச்சாஸனனுடைய மார்பைப் பிளந்து, நரஸிம்மனைப் போல், இரத்தத்தைக் குடிப்பேனெ"ன்றான். அர்ஜுனன், "கௌரவர்கள் மெச்சும்படி இச்சகம் பேசும் இந்தக் கர்ணனையும், அவனைச் சேர்ந்தவர்களையும், மற்றும் என்னுடன் யுத்தஞ் செய்யும் யாவரையும், என் பாணங்களால் யமலோகத்திற் கனுப்புவேன். ஹிமயமலை, தன் இடத்தைவிட்டுப் பெயர்ந்து ஏழு ஸமுத்திரத்திற்கப்பால் சென்றாலும், சூரியன் காந்தியற்றாலும், சந்திரன் கொதித்தாலும், என் வார்த்தை பொய்யாகாதெ"ன்றான். ஸஹதேவன் காலஸர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டுச் சகுனியைப் பார்த்து, "மதி கெட்டவனே! உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் என் பாணங்களுக்கு இரையாக்குவது என் கடமை"யென்றான். நகுலன் "என் ஸஹோதரர்சளுக்குத் தப்பியிருந்தவர்களையும், சகுனியின் புத்திரனான உலூகனையும் நான் கொன்று, பூமியில் திருதராஷ்டிர வம்சமே யில்லாமல் செய்வேனெ"ன்றான். திரௌபதி, "பாபி துர்யோதனா! நீ துடையை எனக்குக் காட்டினதால் எனக்குப் பதிலாக மிருத்யு அதன்மேல் இப்பொழுதே உட்கார்ந்துவிட்டான். நீசனான துச்சாஸனனுடைய இரத்தத்தைப் பீமஸேனன் குடிக்கப் போகிறானென்பதில் ஸந்தேஹமுண்டோ? அவனால் தொடப்பட்ட கூந்தலை, அவனுடைய இரத்தத்தால் நனைத்த பிறகே, நான் முடிப்பேனெ"ன்றாள். திரௌபதி இப்படிக் கோரமான சபதம் செய்தபொழுது, ஆகாயத்திலிருந்து பூமாரி பொழிந்தது. மஹா பதிவிரதையான யாக்ஞஸேனையின் கற்பினாலும், பீமனுடையபலத்தாலும் அர்ஜுனனுடைய பராக்கிரமத்தாலும், யுதிஷ்டிரருடைய ஸத்ய விரதத்தாலும், கௌரவர்களுக்கு நேரப்போகும் நாசத்தை நினைத்து, அந்தச் சபையோர் ஒன்றும் பேசாமல் பயந்திருந்தார்கள்.

உடனே அர்ஜுனன் திரௌபதியின் சொல்லால் மெய் மறந்து, கோபமே உருவெடுத்தது போல் காண்டீவத்தை எடுத்துக்கௌரவர்களை அழிக்க நினைத்தான். பீமன் மனமகிழ்ந்து தானும் யுத்தஞ்செய்ய எழுந்தான். திரௌபதியும் தனஞ்ஜயனைக் கடைக்கண்ணால் தூண்டிவிட்டாள். பூமி நடுங்கிற்று. காற்று அடிக்கவில்லை. சூர்ய சந்திர நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கின. ஸகலப் பிராணிகளும் பயந்து திகைத்தன. பிரளயகாலாந்தகனைப் போல் கோரமாய்க் கர்ஜித்துக்கொண்டு கிளம்பின பார்த்தனை, யுதிஷ்டிரர் சாந்தமான பார்வையுடன் பார்த்து "அர்ஜுனா! தர்மத்தை மறக்காதே. பொறுமையைக் கைவிடாதே. முன் யோசனையில்லாமல்நடக்காதே. கீர்த்தியை அழிக்காதே. இந்தத் துஷ்டர்கள் அனைவரையும் நான் கோபதிருஷ்டியால் சாம்பலாக்க முடியாதா! அது அதர்மமென்றே என் கோபத்தை அடக்கினேன். உலகத்தின் நன்மைக்காக நீயும் கோபத்தை அடக்கி பின்பு போர்க்களத்தில் சத்துருக்களின் மேல் செலுத்துவாயெ"ன்றார். அர்ஜுனன், அந்த ஜாடையை அறிந்து, ஸமுத்திரம் வடவாக்கினியை அடக்கிக் கொள்வதைப் போல், தன் கோபத்தை அடக்கிக்கொண்டான். அதைக்கண்டு சகல பிராணிகளும் சந்தோஷித்தன.

அப்பொழுது கோரமான அபசகுனங்கள் உண்டாவதைக்கண்ட திருதராஷ்டிரன் பயந்துவருந்தி, "புத்தியில்லாத் துர்யோதனா! அயோக்கியா! கௌரவ ஸபையில் ஒரு பெண்ணை அதிலும் தர்மபத்தினியான திரௌபதியை அவமானஞ் செய்து, பரிஹாஸமாய்ப் பேசினாய். அதனால், கெடுவாய். பாஞ்சாலீ! நீயோ மஹா பதிவிரதை. தர்மத்தையே தெய்வமாகக் கொண்டவள். என் மருமக்களுக்

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்குள் தெரியும்.

குள் சிறந்தவள், வேண்டிய வரங்களை என்னிடத்தில் கேட்டுக் கொள்ளெ"ன்ருன்.

அப்பொழுது திரௌபதி "பரத சிரேஷ்டா! தர்ம ஸ்வரூபியும் மகாத்மாவுமான யுதிஷ்டிரர் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டியது முதலாவது வரம். என் புத்திரனை பிரதிவிந்தியனைத் துஷ்டர்கள் தாஸிபுத்திரனென்று சொல்லாமலிருக்கவேண்டுமெ"ன்ருள். கௌரவாதிபதி "சிறந்தவளே! அப்படியே ஆகட்டும். இன்னும் ஒரு வரத்தை கேளெ"ன்ருன். திரௌபதி "மன்னர்க்கரசே! மற்ற பாண்டவ சிரேஷ்டர்களும், ஸ்வதந்திரத்தை அடையவேண்டுமெ"ன்று கேட்டுக் கொண்டாள். திருதராஷ்டிரன் "உத்தமியே! உன் இஷ்டம் நிறைவேறட்டும். இன்னும் ஒரு வரத்தையும் கொடுக்கிறேனெ"ன்ருன். திரௌபதி "மகிமை பொருந்தினவரே! வைசியனுக்கு ஒருவரமும், க்ஷத்திரியப்பெண்ணுக்கு இரண்டும், அரசனுக்கு மூன்றும், பிராமணனுக்கு நூறு வரங்களும் கொடுக்கலாமென்று பெரியோர் சொல்லுகிருர்கள். அதிக ஆசை தர்மத்தைக் கெடுக்கும். தாங்கள் கொடுத்த வரங்களால் என் கணவர்கள் மிகுந்த பாபத்திலிருந்து விடுபட்டு, இனி நற்செய்கைகளால் க்ஷேமத்தை அடைவார்களெ"ன்ருள்.

பிறகு யுதிஷ்டிரர் கௌரவவேந்தனிடத்திற்குச் சென்று, "நீரே எங்களுக்குப் பிரபு. நாங்கள் இனிச் செய்ய வேண்டியதைக் கட்டளையிடுங்களெ"ன்ருர். அதற்கு அம்மன்னன், "அப்பா, குழந்தாய்! தர்ம ரஹஸ்யங்களை அறிந்த நீ, இங்கு நடந்த பாபச் செயல்களை மறந்து,எப்பொழுதும்போல் உன் ராஜ்யத்தை ஆண்டுவரக் கடவாய். நமது புத்திரர்களின் சிநேகிதர்களையும் பலா பலங்களையும், பார்க்க விரும்பியே இந்தச் சூதாட்டத்தை விலக்காமலிருந்தேன். உனக்கு சகல க்ஷேமங்களுமுண்டாகட்டுமெ"ன்ருன்.

பிறகு யுதிஷ்டிரர் தன் தம்பிமார்களோடும் கிருஷ்ணையோடும் இந்திரப்பிரஸ்தத்திற்குப் போகப் புறப்பட்டார். அதைக் கேட்ட துரியோதனன் மனங்கொதித்து, திருதராஷ்டிரனைப் பலவிதமாய் நிர்ப்பந்தஞ்செய்து, அவன் எவ்வளவு சொல்லியும் கேட்காமல், பாண்டவர்களை மறுபடியும் சூதாட அழைக்கும்படி செய்தான். காந்தாரி, தன் புத்திரர்களிடத்தில் மிகுந்த அன்புள்ளவளானுலும், தர்மம் தவருதவளாகையால், தன் கணவனைப் பார்த்து, "துர்யோதனன் பிறந்தபோதே 'குலத்தைக் கெடுப்பவனை இந்தப் பாபியைப் பரலோகத்திற்கனுப்புவது நலமெ"ன்று விதுரர் சொன்னதை நாம் அலக்ஷயம் செய்யாமலிருந்தால் இவ்வளவு அனர்த்தங்கள் நேர்ந்திராது. இவன் பிறந்தவுடன் நரியைப்போல் ஊளையிட்டான். இந்தக் குலநாசத்திற்கு இவனும், சிறுபிள்ளைகளின் பேச்சைக் கேடகும் நீங்களுமே காரணமாவீர்கள். கட்டின அணையை உடைப்பது போலும், அணைந்த நெருப்பை மூட்டுவது போலும், கோபத்தை யடக்கித் திரும்பிப் போன பாண்டவர்களை எவன் கோபமூட்டுவான்? புத்திரர்களிடத்திலுள்ள அன்பால் தர்மத்தைத் துறந்து, அதர்மத்தைக் கைக்கொள்ளப் போகிறீரெ"ன்ருள். திருதராஷ்டிரன் "குலத்திற்கு நாசம் வந்தாலும் வரட்டும். என்னுல் தடுக்கமுடியாது. என் பிள்ளைகளின் இஷ்டப்படியே நடக்கட்டுமெ'ன்ருன்.

தூதர்களால் அவனுடைய ஆக்ஞையைக் கேட்டு, மறுபடியும் சூதாட அழைக்கப்பட்ட யுதிஷ்டிரர், புன்சிரிப்புடன் "பகவானுடைய திருவுள்ளம் எவ்வளவுவிசித்திரமாயிருக்கிறது பிராணிகள் நன்மையையும் தீமையையும் விதிப்படி அனுபவிக்கின்றன. மறுபடியும் ஆடவேண்டுமோ? சூதிற்கழைப்பது தீமையை விளைக்குமென்றறிந்தும், அரசனுடைய கட்டளையை நான் மீறமுடியாது. பொன் மானென்று ஓர் மிருகம் ஒருநாளும் இருந்ததேயில்லை. ஆயினும், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அதைப் பிடிக்க விரும்பினுர். கஷ்டம் நேருங்காலத்தில்மனிதர்களின் புத்தியும் மழுங்கிப் போகின்றனவெ"ன்று தம்பிமாருடன் திருப்பிவந்தார். சகுனியின் மோசத்தை அவர் அறிந்திருந்தும் காலகதியை அனுசரித்துச் சூதாட சம்மதித்தார்.

அப்பொழுது சகுனி, "யுதிஷ்டிரா! நாங்கள் உங்களால் ஜயிக்கப்பட்டாலும், நீங்கள் எங்களால் ஜயிக்கப்பட்டாலும், தோற்றவர்கள் பன்னிரண்டு வருஷங்கள் வரையில் மான்தோலை உடுத்து வனவாஸஞ் செய்யவேண்டும். பதின்மூன்ருவது வருஷம் பந்துக்களால் கண்டுபிடிக்கப்படாமல், அக்ஞாதவாஸம் செய்ய வேண்டும். கண்டுபிடிக்கப்பட்டால், மறுபடியும் வனத்தில் பன்னிரண்டு வருஷங்கள் வசி

க்கவேண்டும். இப்படிப்பதின்மூன்று வருஷங்கள் கழிந்தால், மறுபடியும் வழக்கம்போல் அவரவர்களுடைய ராஜ்யத்தைப் பெறுவோம். இதையே பந்தயமாய் வைத்துச் சூதாடுவோமெ''ன்றான். மகா புத்திமானான தர்மராஜன் யாவற்றையும் அறிந்திருந்தும், கௌரவர்களுக்கு நாசமும், பூமியின் பாரம் நீங்குவதற்குக் காலமும் வந்ததென்றறிந்து மறுபடியும் சூதாடினார். சகுனி முன்போல் ஜயித்தான். யுதிஷ்டிரர் தோற்றார். பிரதிக்ஞைப்படி பாண்டவர்கள் வனவாஸ தீக்ஷை பூண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது கௌரவர்கள் அவர்களை மறுபடியும் பரிஹாஸஞ்செய்ய, பாண்டவர்கள் மறுபடியும் முன்போல் கோரமான சபதம் செய்தார்கள். தர்மபுத்திரர் எல்லோரிடத்திலும் வணக்கமாய் விடைபெற்றுக்கொண்டு, அவர்களுடைய ஆசீர்வாதத்தை யடைந்து, பீஷ்மர், விதுரர், துரோணர் முதலிய பெரியோர்களால் புத்திமதி சொல்லப்பட்டு, அவர்களை நமஸ்கரித்து, "நாங்கள் க்ஷேமமாய்த் திரும்பிவரவேண்டுமென்று அனுக்கிரஹிக்கவேண்டு''மென்றார். விதுரர் "உங்களுடைய பிரதிக்ஞை நிறைவேறட்டும். நீ ஹிமயமலையில் மேருஸாவர்ண்யரென்ற மஹரிஷியாலும், வாரணாவதத்தில் வேதவியாஸ பகவானாலும், பிருகுதுங்கமென்ற பர்வதத்தில் பரசுராமராலும், திருஷத்வதீயென்ற நகரத்தில் பரமசிவனாலும், கல்மாஷ நதிக்கரையில் பிருகுமஹரிஷியாலும், சகல தர்மங்களையும் ஆத்ம ஞானத்தையும் உபதேசிக்கப் பட்டிருக்கிறாய். நாரத பகவான் உன்னிடத்தில் அளவற்ற பிரியத்துடன் அடிக்கடி உன்னைக் கண்டு தர்ம ரஹஸ்யங்களைப் போதிக்கிறார். புத்தியில் புரூரவஸையும், பராக்கிரமத்தில் எல்லா அரசர்களையும், தர்மானுஷ்டானத்தில் மஹரிஷிகளையும், ஜயத்தில் இந்திரனையும், பொறுமையில் யமனையும், ஐச்வரியத்தில் குபேரனையும், இந்திரிய ஜயத்தில் வருணனையும் மிஞ்சியிருக்கிறாய். தன்னை எல்லோருக்கும் கொடுத்து, தன் குளிர்ச்சியால் அவர்களுடைய தாபத்தைப் போக்கி, ஜீவனத்திற்குக் காரணமாகும் குணத்தை ஜலமும், பொறுமையை பூமிதேவியும், பிரதாபத்தை சூரியனும், தேஹபலத்தை வாயுவும் உனக்குக் கொடுக்கட்டும். தர்மமே ஸத்யம். தர்மமே ப்ரஹ்மம். அதைக் கைவிடாதே யெ''ன்றார்.

தர்மராஜா அந்நகரத்தை விட்டு, தன் ஸஹோதரர்களோடும் மனைவியோடும் வனத்திற்குப் போகும்போது, ஜனங்களுடைய மனதும், நல்லோர்களுடைய அனுக்கிரஹமும், கௌரவ ராஜ்யத்தின் அஷ்ட லக்ஷ்மியும் அவருடன் சென்றன. அப்பொழுது கோரமான அபசகுனங்கள் நேர்ந்தன. தன் ராஜ்யமும் ஐச்வர்யமும் கௌரவர்களால் கவரப்பட்டும், தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் கொடுமையாய் நடத்தப்பட்டும், தர்மபுத்திரர் பொறுமையையும் தர்மத்தையும் விடாமல், ஒருவேளை தன்னை மறந்து கோபம் வந்து உக்கிரமான பார்வையால் கௌரவர்களை எரிக்கும்படியாயிருக்குமோவென்று பயந்து, வஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொண்டு போனார். 'புஜபலத்தில் எனக்கு நிகரில்லை. இரும்புத் தூண்களைப் போன்ற என் கைகளால் இந்தக் கௌரவர்களை யமலோகத்திற்கனுப்புவேனென்று, பீமன்தன் பெரும் கைகளிரண்டையும் பார்த்துக்கொண்டே போனான். இரு கைகளாலும் பாணங்களைப் பிரயோகிக்கும் திறமையுள்ள அர்ஜுனன், "பாபிகள் வசிக்கும் தேசத்தில் மண்மாரி பெய்து அழிப்பதுபோல், என் பாணங்களை ஓயாமல் தாரையாய்ப் பெய்து, இந்தக் கௌரவர்களையும் அவரைச்சேர்ந்தவர்களையும் அழிப்பேனெ''ன்று காட்டி, மணலை இறைத்துக்கொண்டே சென்றான். "இந்தக் காலத்தில் என் முகத்தை யாரும் தெரிந்துகொள்ளக்கூடாதெ''ன்று நினைத்து, ஸஹதேவன் முகத்தில் வர்ணத்தைப் பூசிக்கொண்டு போனான். "போகும் வழியில், பெண்களின் மனதை நான் கவரக்கூடாதெ''ன்று நினைத்து, நகுலன் அங்கமெல்லாம் புழுதியைப் பூசிக்கொண்டு சென்றான். வீட்டிற்கு விலகியிருந்த திரௌபதி, ஒற்றை வஸ்திரத்தோடும் விரிந்த கூந்தலோடும் அழுதுகொண்டே சென்றாள். "நான் இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கும்படி செய்த மனிதர்களின் மனைவிகளும் பெண்களும் உடன் பிறந்தவர்களும் இன்றைக்குப் பதினான்காவது வருஷத்தில், உற்றாரையும் பெற்றாரையும் இழந்து, அவர்களின் இரத்தத்தால் உடம்பெல்லாம் பூசப்பட்டுத்தலைவிரிகோலத்துடன், புழுதி படிந்து,

கோவென் றலறிக்கொண்டு, மார்பிலும் முகத்திலும் அடித்துக்கொண்டு, பிரேதக் கிரியைகளைச் செய்ய இந்நகரிலிருந்து புறப்படுவார்களெ"ன்ற கோரமான வார்த்தைகள் அவனுடைய வாயிலிருந்து வந்ததைக் கண்டு ஜனங்கள் நடுங்கினார்கள். பாண்டவர்களுக்குப் புரோகிதரான தௌம்யர், "பதினான்காவது வருஷத்தில் நேரும் மஹா யுத்தத்தில் கௌரவர் அனைவரும் கொல்லப்பட்டு, அவர்களின் புரோகிதர்கள் இப்படி அவர்களுக்குப் பிரேதக்கிரியைகளைச் செய்வார்களெ"ன்று ஜாடையாய் அறிவிப்பதுபோல், தென்மேற்கு மூலையிலிருக்கும் தர்ப்பங்களை அறுத்து, யமனையும் ருத்திரனையும்பற்றின கோரமான ஸாம மந்திரங்களை ஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு அவர்களுக்கு முன்னே சென்றார்.

நகரத்து ஜனங்கள் யுதிஷ்டிரரைப் பின்தொடர்ந்து, அவரைப் பிரிய மனமில்லாமல், அவர்கள் வனங்களில்வஸிக்கும்வரையில்தாங்களும் அவர்களுடனிருப்போமென்று நிர்ப்பந்தித்தார்கள். அதைக் கேட்டு யுதிஷ்டிரர் அவர்களை வணங்கி, "நண்பர்களே! எங்களிடத்தில் நீங்கள் வைத்திருக்கும் அன்பாலும் இரக்கத்தாலும், நீங்கள் எங்களிடத்திலில்லாத நற்குணங்களைக் கண்டு புகழ்வதாலும் ஆசீர்வதிக்கப்பட்டோம். நானும் என்னுடன் பிறந்தோர்களும் உங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளும் விஷயம் என்னவென்றால், குருகுல பிதாமஹரான பீஷ்மாசார்யரும், திருதராஷ்டிர மஹா ராஜாவும் இன்னும் மற்றுமுள்ள எங்கள் நண்பர்களும் ஹஸ்தினபுரத்திலிருக்கிறார்கள். வருத்தத்தாலும் கஷ்டத்தாலும் அவர்கள் பீடிக்கப்படுவார்கள். நீங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து இயன்றவரையில் அவர்களுக்கு உபசாரம் செய்து, அவர்கள் வருந்தாதபடி பார்த்துக்கொள்வதே எங்களிடத்தில் உங்களுக்குள்ள அன்பிற்கு அடையாளமாகும். அதைவிட எங்களுக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கும் விஷயம் வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லை. எங்களிடமுள்ள பிரியத்தால் வெகுதூரம் நீங்கள் வந்துவிட்டீர்கள். திரும்புங்கள். எங்கள் நன்மையை விரும்பும் நண்பர்களையும் உறவினர்களையும் உங்களிடம் ஒப்புவித்துக் கவலையற்றுவனவாஸம் செய்யும்படி எனக்கருள்புரிய வேண்டுமெ"ன்றுவேண்டினார்.

சீட்டுக் கவி

COMPLIMENTARY VERSES

[ஸ்ரீமான் ஜீ. ஏ. சுந்தரமய்யரவர்கள், பீ. ஏ., பி. எல்.]

தமிழ்ப் புலவர்கள் பழைய வழக்கங்களை விசேஷமாய்க் கைவிடாமல், இன்றும் அனுஷ்டித்து வருகிறார்களானாலும், முற்காலத்துத் தமிழ்ப்புலவர்கள் ஒருபிரபுவைப் பார்க்கப் போகுங் காலத்தில் சீட்டுக்கவி எழுதும் வழக்கம் இக்காலத்தில் காணப்படவில்லை. புதிதாய் ஒருவரைப் பார்த்து தம் விவரங்களை வாயால் சொல்வதைக் காட்டிலும், எழுத்து மூலமாயே தெரிவிப்பது, பல காரணங்களால் சௌகரியம். இதைக்கொண்டே இப்போதும் ஒருவர் ஒரு பெரிய மனிதரை பார்க்கப் போனால் தன் பேரைக் கண்டு எழுதிய வரவு சீட்டு (Visiting Card) கொடுத்தனுப்புகிற வழக்கம் பரவியிருக்கிறது. முற்காலத்துத் தமிழ் வித்துவான்கள் எழுதிய சீட்டுக்கவிகள் தற்காலத்து வரவு சீட்டு அனுப்பும் வழக்கத்தைப்போல்தான்.

சீட்டுக்கவிகளில் தற்புகழ்ச்சி பரவக் காணலாம். இது இழுக்கன்றாம். இக்காலத்து வரவு சீட்டிலும், கலாசாலைப் பட்டப்பெயர் முதலியவைகளைச் சேர்த்துக்கொள்வது பிரசித்தம்.

சீட்டுக்கவிகள் புலவர்களால் எழுதப்பட்டவையானதால், வரவு சீட்டுக்கள்போல சுருக்கமாய் இல்லாமல் நீண்டு கவிரஸம் பொருந்தியவைகளாகவே இருக்கும்.

சில சீட்டுக்கவிகளை இனி பார்ப்போம்.

சோடசாவதானி சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய சீட்டுக் கவிகளுட் சில வருமாறு:—

"கல்விச்சமுத்திரங் கமலாலயர் தமிழ்க்கடல்
    மடைதிறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடங் கலைமக ளிருப்பிடங்
    கவி மாரி பொழியு மேகம்
சொல்வித் பனம்விளையு மதுரக் களஞ்சியம் தோன்று
    கர்ப்பூர தீபம்.
சுகிர்த குண வவதானி சரவணப் பெருமாள்
    கைதொட் டெழுதி விட்ட சனது
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்திரன்
    வெற்றிக்கு விக்கிர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்திக்கருப்பிணை
    விலட்சணன் எதிர்த்து காண்க

மல்வெத்தி யாயன்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென்றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருர்புரிவையே.

இச்சரவணக்கவிராயர், சேது நாட்டில் வசித்தவர். இராமநாதபுரம் சோமசுந்தர குருவினது மாணக்கர். இப்புலவர் தமது நாட்டையும், தமது வேந்தனையும் தமது ஆசிரியரையும், தமது நாட்டுத் தலங்களையும் தீர்த்தங்களையும் சிறப்பித்துப் பல சீட்டுக்கவிகள் எழுதியிருக்கிறார். அடியில் வரும் கவியில் இப்படிச் சிறப்பித்திருப்பதைக் காணலாம்.

மரபுதவி ராதவன் சோமசுந் தரகுரு
மலர்ப்பதம் பரவு தாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாள் கவிச்சக்கர
வர்த்தி தேர்ந்தெழுது திருபம்
வளர்காரை யம்பதியில் மேவுதுரை லட்சுமண
மந்திரியெதிர் கொண்டு காண்க
வாணருக் குபகாரி நீயாகை யாலெமது
வல்லமையு மகிமையுங் கேள்

கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்ல
வாய் கவேது மயிலுமென்னக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதை யிரு
கையிலொரு கவிதை யெழுதக்
கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு புறஞ்
சொலக் காணத்திரை மறைவிலே
கனருது சதுரங்க மொடுகுதிரை யடி சொலக்
கன்னெல்லு முதுகிலெண்ணப்

பரிவுபெற்ற புதச்சேரியிற் சென்றினிய
பண்பரிச்சி லையவாத்தி
பண்புள குமரபா ரதிமதுரகவி வீரபத்திரகவி
கொண்டாடவே
பாக்கிய ரனந்த நாதன் சபையிலுஞ் செய்து
பல்லக்குவரிசை பெற்றேன்
பலகா வியங்களுந் தெரிவே எளப்பரிய பஞ்ச
லட்சணமு மறிவேன்

அரசரிலுயர்ந்த துரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவாயிலில்
அக்திய முனிக்கு மதிகங் கற்ற பேர்களா
யாயிரங் கவிவாணருண்
டவரிலொரு சிறவன் யான் பாடவறியேனென்
றகத்திவிட் டார்க வென்னை
ஆதலாற் பூமியிற் சஞ்சரித்தே னின்னகந்
தனில் மகிழ்ந்தருள்வையே?

இவரது சீட்டுக் கவிகளில் தமது நாட்டையும் குருவையும், அரசனையும், மூர்த்தி, தீர்த்தத்தையும், புகழ்ந்து எழுதியிருப்பதை அடியில் வரும் சில அடிகளில் காணலாம். கவிகளை முழுவதும் எடுத்தெழுதினால் விரியுமாதலால் சில அடிகளை மட்டும் எடுத்துக்காட்டுவோம்.

யௌவன மனோன்மனி பதம்பணிகொள்
சேது பதி யிறைவன் மணிவாசன் மணிவாய்
இலகுமணி சைவமணி சோமசுந் தரகுரு
வெனையன் மகிழ் சிந்தா மணி
செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி யனுப்பு மோலை
செய்யதிரு மலைராயன் பட்டணத் தவரெலாம்
சிரசுமேற் கொண்டுகாண்க

* * * *

அட்டதிசை பணி செயுஞ் சேதுபதி மணிவாச
வட்டாவ தான சிங்கம்
அருந்தமிழ்ச் சோமசுந் தர குரு சுவாமி யடிமைக்
குமடிமை

* * *

மகபதிராதிபதி சேதுபதி வாசற் பிரசண்டவாக்கி
வடிதமிழ் சோமசுந் தரகுரு சுவாமி யடிமைக்குமடி
மைக்கு மடிமை

* * *

ஜெய ராம நாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்தமெங்கள்
"சேதுபதியே ராஜன்"*

* * *

இக்கவிராயர் தொண்டைமானுக்கு அனுப்பிய சீட்டுக் கவி ஒன்றையும் பார்த்துவிட்டு வேறு புலவர்கள்கவிகளை எடுத்தெழுதுவோம்.

நீதி பெறுகல்வி ப்ரதானந் தெளிந்திடு நிதான
ஞானப்பிரகாசம்
நித்திய சுமங்கள கவிதா ப்ரசங்க மனவேய சுந்தர
விலாசம்
வேதாந்த சாகரஞ் சித்ராவ தான தமிழ் மேகம் சபா
ரஞ்சிதம்
வித்வஜன சேகரம் சேதுபதி வாசலில் விளங்கு நவ
ரத்ன தீபம்
சிதரஞ் சோமசுந் தரகுரு சுவாமி திருவடி துதிக்கு
மடிமை
சீர்பெருஞ் சரவணப் பெருமாள் கவீசுவரச் செய
சிங்கமெழுது மோலை
மாதவன் விசயரகு நாததுரை தொண்டை
மானெதிர் நடந்து காண்க
வரிசைபெற நூறொன்று பாடிவந் தனமுனது
மனமகிழ்ந்தருள் புரிவையே

சரவணப்பெருமாள் கவிராயர் குமாரர் அருணாசல கவிராயரும் சீட்டுக்கவிகள் பாடியிருக்

கிறார். அவர் கவியின் நடையும் சரவணக் கவிராயர் கவிநடை போலவே இருக்கிறது. இப்புலவர் சீட்டுக் கவிகளுள் ஒன்று.

சக்ரவா ளத்தகடு முகடுபடபடென பிரசங்கத்
தெழுந்த சிங்கம்.
தத்வ லட்சண வித்வ லட்சண சுலட்சண
சபா ரஞ்சிதம்
சத்திய லோகத்தும் அதலத்தும் விதலத்தும்
நிலத்தும் பிரசித்ததுல்யம்
சற்குணலயமினிமை பெறுசுவைக் கல்விய முதத்
தலங்கார கும்பம்
உக்ரகாடின்ய திடதட விகட கடன் மண்ட
யுடைத் தெழு தமிழ்க்குஞ்சரம்

உசிதத்துகந்த சித்தாந்த வேதாந்த உராம
வைராக்கிய சித்தம்
உபய பர்வதவட வரைக்கப்புறத்து முலவப்புகழ்
நடத்து வீரம்
உரக கங்கண மகுட புவன சக்ரேச
வுதார நதிசிரேஷ்டம்
கைக்கடாசல கோடி திரு சேதுபதி ராசகர்த்தன்
வாசத் பிரசங்கம்

கற்றறி விலக்கணச் சோமசுந்தரகுரு கடாட்ச
கனகாபிஷேகம்
கருது விரதவவதானி சரவணப் பெருமாள்
கவீசுரன் பெற்றரத்தினம்
கமலை நாமகள் வளர் நிதானி யருணசல
கவிசரப மெழுது மோலை
திக் கெலாந் திறை கொண்ட கவுரிவல்லப ராஜ
சிங்கமெதிர் கொண்டு காண்க

* * *

படிக்காசுப் புலவர் என்று ஒரு சிறந்த புலவர் பாடிய சீட்டுக் கவி ஒன்று அடியில்வருமாறு:-

விருது கவிராஜன் கவி சக்கரவர்த்தி வாய்
வீண் பேசுவார்கள் மிண்டன்
விஞ்சையர்கள் தம்பிரான் களந்தைப்படிக்காசு
விவாமுட னெழுது மோலை
பொருது பிரபந்தமதில் விறல் சேகரன் புகழ்
செய் தளவாய் குமாரன்
பூச்சக்கர மன்னர்பணி ரகுநாத சேதுபதி
பூரித்தெழுந்து காண்க
பருதிமதி யுள்ளளவு நிற்கும் பிரபந்த கவி
பாடிநின் கீர்த்தி கேட்டுப்
பஞ்ச லட்சண தமிழ்க் காணிக்கையுங் கொண்டு
பரிவாக வுனை நாடியே
இருபதின் காதவழி கடலேறிவந்தன
னிருந்தமிழ் கொள்ளவேண்டி
யிந்நேரமே நம்மை யிருகாத வழியளவு மெதிர்
காணவரல் வேண்டுமே"

இராமநாடகம் செய்த சீர்காழி அருணசலக் கவிராயர் எழுதிய சீட்டுக் கவிகள் இரண்டு எடுத் தெழுதுவோம்.

எத்திசையுமே பரவு தட்சணசலமுனி
யெதிர்த்த பாவலர் குடாரி
இராமாயணக் கவிதை நாடகஞ் செய்தவ
னிலக்கண முயர்ந்த புலவன்
முத்தமிழ்க் காழியரு ணசலக் கவிராய
முகில்வா விடுக்குமோலை
முந்துபுகழ் தென் குளத் தூர்முத்து தானப்பன்
முகமலர்ந் தினிது காண்க.
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டியவெலா மக்கணம்
விரகுட னளித்தனை யெனக்கேட்டு நாமுமுனை
மேவினேம் கவியெழுதினேம்
உத்தம சிகாமணி நீயாதலாலிவிட மூன்று
பெருமழை தொடருமுன்
ஓராயிரங் கரும் பதுவேண்டு நீமன
துகந்து வரவிடல் வேண்டுமே"

கனிகொண்ட பஞ்சலட் சண மிராமாயணக்
கடலையு முணர்ந்த புலவன்
கவிராஜர் புகழ்கின்ற காழியரு ணசலக்
கவிராய னெழுதுமோலை
மணிகொண்ட மார்பன் லிங்கப்பன் மகிழ்ந்த
சுதன் வணிகாதிபன்
வருசீர் படைத்ததேப் பெருமாணரேந்திரன்
மனமுவந் தினிதுகாண்க
அணிகொண்ட தியாகேசர் வண்ணமுறை
செய்தது மதற்கு வெகுமதி செய்ததும்
அதினமக் குபகார நீ செய்ததும் புவியி
லறியாத பேரு முளரோ
பணிகொண்ட ராமகீர்த்தனையுமப்படியே
பரிந்து நீ கேட்க வேண்டும்
பாரி லோராயிரம் பிறைகண்டு நீ மகிழ்
படைத்து வாழ்கவினிதே

சுப்பிரமணிய கவிராயர் என்ற ஒரு புலவர் பாடிய சீட்டுக் கவி ஒன்று அடியில் வரும்.

மஞ்சரி கலம்பகங் கோவையு தனமர்க மாலை பல
சந்தமாலை
மடலுலா பரணியின் னைக்கவிதை முதலா வழுத்தும்
ப்ரபந்தவாக்கி
மகுடமுடி மன்னர் சிரகரகம் பிதஞ்செயும் வசன
வுசிதப்ரசங்கன்
வாதபுரி விகடகவி மதகரி குழாங்கடமை வாய்வீற
டக்கு சிங்கம்

கை அழுத்தமானவன் கரையேற மாட்டான்.

சஞ்சரிக முத்தமிழை யெங்கும் செலுத்திவரு
　　தாஷ்டீகமான நிபுணன்
தண்டமி ழிலக்கண இலக்கிய மதாம்பெரிய சலதி
　　நிலைகண்ட வங்கம்
தணிகா சலக்குமார் பாதமற வாதவன்
　　சரசுவதி நடனசாலை
சரசகவி சோடசா வதானிசுப் பிரமணியன்
　　தான் மகிழ்ந் தனுப்பு மோலை
கஞ்சமலர் மாலைமுந் நாலிலங்கு திண்புயன் கருவேடு
　　ககராதிபன்
கவிஞர்கட் பகமுத்த ராபதியனும்பிரக் கியாதி
　　பழமறை வேதியன்
காரைநிக ரானகொடை வீரபூ பாலனருள்
　　காதல்சுத னனசுமுகன்
கங்கைநதி யானன்வேங் கடரங்க மாலிது
　　கருத்தினின் மகிழ்ந்து காண்க
விஞ்சுபுவி மீதிலுன் போலாஞ்சிற்குண
　　விவேகிவே றில்லை யென்றே
விரும்பிவெகு காளாக வுனையடுத் தனனெனது
　　வறுமைதீர்ந் திடவு மினியோர்
வேளைதனி லென்றனவ தானமது தன்னையென்
　　மீதிலன் பாகமகிழ்வாய்
வினவியிப் புவியிலுன் பேரிலுங்கவியிலுமிகு
　　மேன்மை செய் திடல் வேண்டுமே''

கண்பார்வையில்லாத அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்னும் புலவர் சீட்டுக்கவி ஒன்றின் முற்பாதியை எழுதி இந்த வியாசத்தை முடிப்போம்.

ஏடா யிரங்கோடி யெழுதாமல் தன் மனத்
　　தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக்
　　கவிவீர ராகவன் விடுக்கு மோலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்
　　பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம்புரந்துதா கம்தீர்ந்த
　　செழியனெதிர் கொண்டு காண்க.

பொங்கலகவல்

[ஸ்ரீமான் பண்டித ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்.]

வடதிசைக் கிமைய வரையே வரம்பா
ஏனைமுத் திசைக்கும் எதிதிரைப் புணரியே
எல்லையாத் துன்னிய இயம்பருஞ் சீர்சால்
தொல்லுல கேதென நல்லோர் நவிலமுப்
பத்துமுக் கோடியாம் உத்தம ப்ரஜைகளைத்
தன்பாற் கொண்டகம் அன்னையாம் இந்தியா
'தானே தனக்குத் தக்கநற் றுணை' எனச்
சான்றோர் கூறிய ஆன்றமொழி பற்றிச்
சின்னூ னாக முன்னே செல்லத்
தேசபக் தர்களை ஈசன தருளாற்
பெற்று வளர்த்துக் கற்றவர் ஆக்கி
அங்கும் இங்கும் எங்கும் ஆகப்
பற்பல தலத்திடைப் பயில்வுறத் தவராற்
காலத் திற்குப் பொருந்த நூலொடு
பத்திரி கைமுதல் உத்தயக் கருவிகொண்
டெவரையும் அறிவுறீஇ இவர்தாற் பொருட்டுத்
தூண்டுவ தடனே வேண்டிய வரைக்குங்
'கேட்டார்ப் பிணிக்குந் தகைபவாய்' காட்டிற்
கேற்ற வாறுரை ஏற்ற ப்ரசங்க
மாரியைப் பொழிவித் தார்தலால் இன்னுஞ்
சின்னா ளில்தான் உன்னிய சித்தியைப்
பெறும் பெறும் ; அதனாற் பேணிஇத் தேசக்
காரியங் களையே கண்ணுக் கொள்வதோ
டொப்புர வுண்மை ஒற்றுமை பொறையே
உறுதி ஒழுக்கம் உயர்வருள் முதலாஞ்
சீரிய குணங்களைக் கூரிய ஆக்கி
மேன்மே லோங்க வளர்த்து வருநம்
உத்தமச் தேச பக்தர்கள் பொங்குக ;
பக்தர் களைப்பரி பாலிப்பான் வளர்
தென்றும் உயர்ந்தோர் இசையெனப் பொலிந்தின்
றுச்சிமேற் கொளவல மெச்சும் புகழ்சேர்
இந்திய மகாசா டொடுபல செந்தமிழ்ச்
சங்கமும் பிறபல பாஷைச் சங்கமும்
பொங்குக பொங்குக பொங்குக ; அன்றியும்
தங்குக நல்லன ; மங்குக தீயன ;
மெய்யுரை வளர்க ; பொய்யுரை மாள்க ;
அறம்உயர்ந் தோங்குக ; மறம்அயர்ந் தேங்குக ;
உரையும் ஒளியும் புரையிலா தோங்குக ;
கல்வியுஞ் செல்வமுங் கவினுற வளர்க ;
புன்மையும் இன்மையும் புகலிடம் இன்றிச்
சென்றுதேய்ந் திடுக ; தேசஞ் செழிக்க ;
நீர்வளம் நிலவளம் ஏர்வளம் எல்லாம்
ஓங்குக ; மேன்மேல் உத்தமக் குடிகளும்
ஒப்புயர் வற்றிங் குயர்ந்து மகிழ்ந்திடுக ;
செப்பிய திருமால் எனத்தினம் நம்மாற்
கொண்டா டப்பெறுங் கொற்றவன் ஓங்குக ;
எல்லவ ருக்கும்நல் இன்பமொ டாயுளும்
வளருக ; அன்பே மன்னுக ; அருளும்
கூடுக ; தமிழுங் குவலய மதனிற்
பீடுபெற் றுயர்வாய்ப் பிறங்குக என்றிவ்
வாண்டெனும் உயர்சித் தார்த்தியோ டண்டிய
தையெனப் பெயரிய தய்யநன் மாதப்
பிறப்பாஞ் சீரிய சிறப்புறு மொருபுதன்
வாரத் தினத்தில் ஆரப் பெருகிப்
பொங்குக பாலும் பொங்குக ;
பொங்குக நின்மறப் பெங்கணும் பொலிந்தே.

சந்திரகுப்த விக்ரமாதித்யன்

CHANDRAGUPTA VIKRAMADITYA

[ஸ்ரீமான் ஆர். ரெங்காசாரியார் அவர்கள், எம். ஏ., எல். டி.]

நமது நாட்டில் பூர்வத்தில் அநேக முடி மன்னர்கள் வெகு சிறப்பாக ஆண்டுவந்திருக்கின்றனர். அவருள் சந்திரகுப்த விக்கிரமாதித்தன் என்பானும் ஒருவன். பல அரசர்கள், தங்களது வீரத்திற்கும் செல்வாக்குக்கும் அறிகுறியாக விக்கிரமாதித்தன் என்ற பட்டப்பெயரைப் புனைந்துள்ளார்களாயினும், குப்தவம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது சந்திர குப்தன் என்பானே அப்பெயர் புனைவதற்குத்தகுதியுடையயவனென்பது இவனைப்பற்றிக் கூறப்படும் பின் வரலாற்றால் அறியலாகும்.

இவன் குப்த வம்சத்தின் மூலபுருஷனான சந்திர குப்தனது பௌத்திரன். சமுத்திர குப்தனுக்கும் அவனது பட்டமகிஷியாகிய தத்தாதேவிக்கும் புத்திரன். தகப்பன் வெகு கியாதியுடன் ஆண்டுவரும் நாளிலேயே இளவரசப்பட்டம் எய்தி, இராச்சிய பாரத்தைத் தந்தையுடன் வகித்துச் சரிவர நடாத்தி வந்தவன். இவனது தந்தை 50 ஆண்டுகள் அரசுரிமை தாங்கிவந்தமையின், இவன் பட்டத்துக்கு வந்தபோது இவனுக்கு வயது முதிர்ந்திருக்கவேண்டு மென்பது திண்ணம். இவன் பட்டம்பெற்ற வருஷம் நமக்கு இப்போது உண்மையாகத் தெரியாது. ஆயினும் கி. பி. 375-க்கு ஸமீபத்தில் அவன் மகுடாபிஷேகம் செய்யப்பட்டிருக்கவேண்டு மென்பது ஒருவாறு ஊகிக்கப்பட்டுள்ளது. இவனுடன் பிறந்தோர் பலரிருப்பினும் இவனது தந்தை தனக்குப் பின்னால் அரசபாரம் தாங்குவதற்கு ஏற்றவன் இவனே யெனத் தெரிந்தெடுத்தான். இதனால் இவன் யுவராஜனாக விருக்கும்போது இராச்சியப் பொறுப்பைத் திறமையுடன் தாங்கிவந்தனனென அறியக்கிடக்கின்றது. இவனும் தந்தையின் விருப்பத்தின்படியே இராச்சியத்தை யாதொரு சண்டை சச்சரவின்றிப் பெற்றான்.

இவன் அரசு கட்டிலில் ஏறியபோது இவனது இராச்சியம் வெகு விஸ்தாரமாக விருந்தது. இவனது தந்தை சேனைகொண்டு சென்றவிடமெல்லாம் ஜயபேரிமுழக்கிப் பல நாடுகளைக் கவர்ந்து தன் நாட்டை நாற்புறமும் வளர்த்தனன். தந்தையின் வழியையே பற்றி நடக்க இவனும் எண்ணினான். ஆயினும் இவன் முக்கியமாக வடநாட்டிலேயே படையெடுத்துச்சென்றான். தென்னாட்டின் மீது இவன் படையெடுத்துச் செல்லவில்லை. இவனது சேனை கிழக்கிலும், வடமேற்கிலும், தென்மேற்கிலும் சென்று பகைவரைத் தாக்கின. டில்லி நகரில் இவனால் நாட்டப்பட்ட ஒரு இரும்புத்தூண் உள்ளது. அதில் இவனைப் பற்றிய ஒரு சாஸனம் செதுக்கப்பட்டுள்ளது. அச்சாஸனம் சிறந்த சுலோகங்களால் ஆக்கப்பட்டது. (இதிலிருந்து) இவ்வரசன் வங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று தன்னை யெதிர்த்த பகையரசரை வேரறுத்தான் என்பது தெரிகிறது. இச்சாஸனத்தை சுலோக ரூபமாகச்செய்த பண்டிதனுடைய வாக்கை உத்தேசித்தால், இவ்வரசன் வென்ற பகைவர்கள் இவனது நாட்டைப் படையெடுக்கவில்லை யென்பதும், அவர்கள் கலகஞ் செய்ததற்காக முறியடிக்கப் பட்டார்களென்பதும் தெளிவாகின்றன. இன்னும் இவ்வரசன் ஸிந்து நதியின் ஸப்த முகத்தையும் தாண்டிச் சென்று அங்கேவசித்துவந்த வாஹ்லிகர் என்றவோர் ஜாதியாரைப் போரில்வென்றானென்பதும் இச்சாஸனத்தால் வெளியாகின்றது.

மேற் குறித்த படை யெழுச்சிகளெல்லாம் இவ்வரசனது வீரத்திற்கும் புகழுக்கும் ஓர் அறிகுறியாகா. இவன் சௌராஷ்டிர தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று அதை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டதே இவனது பெரும்புகழுக்கும் விக்கிரமாதித்தனென்ற இவனது பட்டப் பேருக்கும் காரணமாயிற்று. ஆதலால் இப்படை யெழுச்சியைப் பற்றித் தெரிந்துகொள்வது மிக்க அவசியமாகின்றது.

ஸௌராஷ்டிரதேசம் இந்தியாவின் மேற்கே மேல் கடலோரத்திலுள்ள ஒருதேசம். கண்ணபிரானது படைவீடாகிய துவாரகை இதிலேதானுள்ளது. இந்நாட்டின்மீது சந்திர குப்தன் படையெடுத்துச் செல்லவேண்டுமாயின் இடையிலுள்ள மாளவம் கூர்ச்சரம் என்ற இரண்டு நாடுகளின் வழியாக அவன்

கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.

செல்லவேண்டும். இவ்விரண்டு நாடுகளும் குப்தராஜ்யத்துடன் இன்னும் சேரவில்லை. சமுத்திர குப்தனது நாளில் அவை குடியரசு நாடாக விருந்தாலும், அவை உடன்படிக்கை மூலமாக சமுத்திர குப்தனது ஏக சக்ராதிபத்தியத்தை ஒப்புக்கொண்டன. ஆதலின் சௌராஷ்டிர தேசத்தை வெல்லுவதற்கு முன்பு, மாளவத்தையும் கூர்ச்சரத்தையும் தன்னாட்டுடன் சேர்த்துக்கொள்வது சந்திர குப்தனுக்கு அவசியமாயிற்று. இவனும் அவ்வாறே இவ்விரண்டு நாடுகளையும் முதலில் வென்று தனது இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டான்.

சௌராஷ்டிர தேசம் வெகுகாலமாக சுதந்திரம் பெற்று சாக குடியினரால் ஆளப்பட்டு வந்தது. இவ்விராச்சியத்தை முதன்முதல் ஸ்தாபித்து சாகவம்ஸத்தையும் நாட்டியவன் பூமகக்ஷஹராடன் என்ற சாகமன்னன் ஆவான். இவன் கி. பி. முதல் நூற்றாண்டின் முடிவில் வசித்தவன். இவனுக்குப் பிறகு ஆண்டவன் அதே குடியைச்சேர்ந்த நாதபாணனென்பான். இவன் அடுத்துக் கிழக்கே ஆண்டுவந்த ஆந்திர வரசர்களை வென்று அவரது நாட்டின் ஒரு பாகத்தைக் கட்டிக்கொண்டு தன் இராச்சியத்தை வளர்த்திக்கொண்டான். கி. பி. 126 இல் விலிவாயகுரன் II என்ற ஆந்திர மன்னன் தன் நாட்டைக் கவர்ந்துகொண்டு; நாதபிதிராச்சியத்தையும் சிறுமைப்படுத்திய தன் பாணனைப் போரில் முறியடித்துத் தொலைத்து விட்டான். இதன் பிறகு மேற்றிசை நாடுகள் ஆந்திரர்களுக்குக் கீழே ஒரு சிற்றரசாக மாறிவிட்டன. சாஷ்டானன் என்ற சாகவம்சத்தினன் ஒருவன் ஆந்திர ராஜ பிரதிநிதியாக இப்பாகத்தை ஆண்டு வந்தான். இவனது பேரன் உருத்திரதாமன் என்பான் தனதுமகள் தக்ஷமித்ரா என்பவளை விலிவாயகுராவின் மகன் புலிமாயி II என்ற ஆந்திர மன்னனுக்கு மணமுடித்தானாயினும் தனது இராச்சியத்தைப் பெருக்க வேண்டுமென்ற அவாவால் தன்மாப்பிள்ளை மீது படையெடுத்து அவனை வென்று சௌராஷ்டிரம் மாளவம் கச்சு சிந்து கொங்கணம் முதலிய ஆந்திரநாடுகளைத் தன் வசப்படுத்திக் கொண்டு பெரும்புகழுடன் ஏகசக்கிராதிபத்தியம் செய்துவந்தான். இவனது இராசதானி உச்சனி என்ற நகர். இவன் பாட்டன் நாள் முதல் இந்த வம்சத்தாருக்கு இதுவே தலைநகராகவிருந்தது. இது இந்தியாவின் புராதன நகரேழில் ஒன்று. வியாபாரஸ்தலங்களில் சிறந்தது. மேல்கடல் துறைமுகங்களில் இறங்கும் சரக்குகள் இதன்மூலமாகவே உள்நாடுகளுக்கு அனுப்பப்படும். இன்னும் இந்நகர் கலைகளுக்கும் நாகரிகத்திற்கும் இருப்பிடம். இந்நகரின் இரேகாம்சத்தைக் கொண்டே வானசாஸ்திரிகள் முன்னாளில் தமது கணிதங்களைக் கணித்து வந்தனர். இன்னும் இந்நகரின் பெருமை ஒரு சிறிது விளங்குகின்றது.

உருத்திரதாமனுக்குப் பிறகு அவனது சந்ததியாருக்குள்ளேயே மேற்கூறிய மேல்நாடுகள் இருந்துவந்தன. ஸமுத்திரகுப்தன் பிரபலமாக பாடலிபுரத்தில் ஆண்டுவந்தபோது உச்சினியில் ஆட்சிபுரிந்த உருத்திரதாமன்மகன் உருத்திரசேனனென்பான் தன் தூதுவர் சிலரைப் போக்கி ஸமுத்திரகுப்தனது நட்பைத்தேடிக் கொண்டான். இதனால் இப்பாகத்தின்மீது ஸமுத்திரகுப்தன் படையெடுக்கவில்லை. இவன்மகன் சந்திரகுப்தனோ வடஇந்தியாவை ஒருகுடைக்கீழ்க்கொண்டு வரவேண்டுமென்ற பேரவாக்கொண்டவன். இவன் மேல்நாடுகளில் சாகவம்சத்தினர் மிக்க செல்வாக்குடன் ஆண்டுவருவதைச் சகிப்பானோ? மேல்நாடுகளோ செல்வங்கொழிக்கும் சிறப்பினை யுடையவை. அவற்றை ஆள்பவரோ வேற்றுநாட்டிலிருந்து வந்து மேல்பாகத்தைக் கைப்பற்றியாளும் கொற்றவர்கள்; ஜாதியிலும், மதத்திலும், ஒழுக்கத்திலும் இந்துக்களுடன் ஒற்றுமை சிறிதுமில்லாத அந்நியர்கள்; வருணாசிரம நியதியில்லாத பாசண்டர்கள்; மிலேச்சர்கள் ஆதலின் சந்திரகுப்த விக்கிரமாதித்தனிடம் இந்த சாகவம்சத்தைக் கருவறுத்து மேனாடுகளைத் தன்னாடுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நினைவு எப்போதும் குடிகொண்டிருந்தது. இவன் இந்துமதத்தில் மிகுந்த பற்றுள்ளவன். ஆயினும் பௌத்த ஜைன மதங்களில் வெறுப்பில்லாதவன்; அவற்றை ஒருசிறிது ஆதரித்தும் வந்தவன். தனக்கு எதிரியாக மேல்நாடுகளில் அந்நியர்கள் குடியேறி இராச்சியபரிபாலனஞ் செய்வது இவனுக்குப் பொறுக்கவில்லை. இவன் பட்டத்திற்கு வந்ததுமுதல் இந்நாடுகளைக் கைப்பற்று

கை நிறைந்தபொன் இல்லாவிட்டாலும், கண் நிறைந்த கணவன் இருக்கவேண்டும்.

வதற்கான வழிகளைத் தேடினன். படைகளை ஏராளமாகத் திரட்டிக்கொண்டான். முதலில் மாளவத்தை வென்று கைப்பற்றிக் கொண்டான். பிறகு கூர்ச்சரத்தைக் கட்டிக் கொண்டான். கடைசியாக செளராஷ்டிரத்தின் மீது பெரும்படைகொண்டு சென்று அப்போது ஆண்ட சத்தியஸிம்ஹன் மகன் உருத்திரஸிம்ஹனைப் போரில் முறியடித்து அவனையுங் கொன்று அவன் நாடுகளைத் தனது இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டான்.

மூன்று நூற்றுண்டுகளாக சுதந்தரத்துடன் ஆண்டுவந்த சாகவம்சம் இவ்வாறு சந்திரகுப்தனுல் அழிவுற்றபோது குப்தராச்சியம் மேல் கடலைத் தொட்டுவிட்டது. இப்படையெழுச்சியால் சந்திரகுப்தனுக்குப் பேரும் புகழும் செல்வமும்செல்வாக்கும் கிடைத்தன. தனது வெற்றிக்கு அறிகுறியாக சந்திரகுப்தன் **விக்கிரமாதித்தன்** என்ற பட்டப் பெயரையும் புனைந்து கொண்டான். இப்படையெழுச்சிகளால் மேனுடுகளைக் கைக் கொண்டு தனது இராச்சியத்தைப் பெருக்கிக் கொள்வதற்குப் பலவருஷங்கள் பிடித்திருக்குமென்பதற்கு ஐயமில்லை. அது கி. பி. 388-க்கும் 401-க்கும் இடையில் நிகழ்ந்ததென்பதற்கு ஆதாரங்களுள்ளன. ஆதலால் கி. பி. 395 இல் இவன் இப்போரை வென்று செளராஷ்டிர மாளவ நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான் எனத் தீர்மானிக்கத் தடையொன்றுமில்லை.

இந்நாடுகளோ மிகவும் வளமும் செல்வமும் நிறைந்த நாடுகள். இந்நாடுகளிலுள்ள துறை முகங்கள் மேனுட்டாரோடு வியாபாரம் நடத்தி வந்தன. இவற்றை வென்று சேர்த்துக் கொண்டபோது சந்திரகுப்தனும் இத்துறைமுகங்கள் வழியாக ஐரோப்பா தேசங்களுடனும் எகிப்து தேசத்துடனும் நடை பெறும் வியாபாரத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு, அதன் மூலமாக நாட்டின் ஊதியத்தையும், மேனுட்டாரது கூட்டுறவையும் பெருக்கினன். அக்காலத்தில் அலக்சாண்ட்ரியா நகரிலிருந்து அநேகர் இவனது சமஸ்தானத்துக்கு வந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திரகுப்தன் சுமார் 40 ஆண்டுகள் அரசு நடாத்தி வந்தான் (375-413). இவனைப் பற்றிய வேறு விஷயங்கள் நமக்கு இப்போது வெளியாகவில்லை. மேற்குறித்தவைகளிலிருந்து இவன் ஓர் சிறந்த போர்வீரனென்றும் தனது புஜபல பராக்கிரமத்தால் தான் பெற்ற பெரியதோர் இராச்சியத்தைப் பின்னும் பெருக்குவதற்கான திறமையும் வலிமையும் வாய்ந்தவனென்றும் வெளியாகும். இவன் உயர்ந்த பட்டப்பெயர்களைப் புனைந்துகொள்ளுவதில் பிரியமுள்ளவன். பழைய பாரசிக மன்னர்களைப்போல சிங்கத்துடன் சண்டைபோட்டு அதை வீழ்த்தியதாகத் தன்னைச் சித்திரித்துக்கொள்வதில் இவனுக்கு பிரீதியுண்டு.

இவனது தலை நகர் பாடலிபுரமாயினும் சமுத்திரகுப்தனது நாள்முதல் இது அரசரது வாழ்க்கைக்குத் தகுதிபெருது போயிற்றென்றும் இவனது பெரிய இராச்சியத்திற்கு மத்தியபாகத்திலுள்ள அயோத்தி நகரே சமுத்திரகுப்தனுக்கும் சந்திரகுப்தனுக்கும் சில சமயங்களில் தலைநகராக இருந்ததென்றும் தெரிகின்றன. சந்திரகுப்தன் காலத்தில் இங்கே நாணயசாலையொன்றிருந்தது. இதில் தாமிர நாணயங்கள் அடிக்கப்பட்டன. 5-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அயோத்தியே தலை நகராக மாறிவிட்டது.

இவன் காலத்தில் சீனதேசத்திலிருந்து பாஹியான் என்ற ஓர் பௌத்தயாத்திரிகன் இந்தியாவுக்கு வந்து இவனது நாட்டில் ஆறு வருஷம் தங்கி பௌத்தநூல்களில் ஆராய்ச்சி செய்தும் பௌத்தநூல்களைத் திரட்டியும் வந்தான். அவன் எழுதிய நூலிலிருந்து அக்காலத்தில் குப்தராச்சியத்தின் நிலைமையும் குடிகளின் செல்வமும் சமாதான வாழ்க்கையும், நாட்டின் அமரிக்கையும் பிறவும் தெரிகின்றன. ஆயினும் இவன் தான் வந்தபோது ஆண்டுவந்த அரசனது பெயரைக் குறிக்கவேயில்லை. அவன் எழுதியவற்றிலிருந்து சந்திரகுப்த விக்கிரமாதித்தனே அப்போது அரசு புரிந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கத் தடையொன்றுமில்லை.

மிகவும் அருமையான நூல்கள்:—ஆரியமத உபாக்கியானம். 1-ம் பாகம் விலை அணு 8, 2-ம் பாகம் விலை அணு 10. அநேக ஆப்டோன் படங்கள் கொண்டது; ஒவ்வொரு வீட்டிலும் அவசியமிருக்க வேண்டியவை.

பிலாமரம்

THE JACK

[ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்காராஜு அவர்கள்.]

பிலாமரம் நமது இந்தியாதேசத்தில் அநேக நூற்றூண்டுகளாகப் பயிர் செய்யப்பட்டு வருகிற தென்று தெரிகிறது. விநாயகர் அகவலில் "முப்பழநுகரும் மூஷிகவாகன" என்று சொல்லியிருப்பதாலும் முப்பழம் என்பது வாழை, மா, பிலா என்பதாலும், இது நமது நாட்டில் ஆதிகாலத்திலிருந்து வளர்ந்து வந்த செடியென்று திட்டமாய்ச்சொல்லலாம். முதலில் ஒரே தினுசாக இருந்திருந்தாலும் கால தேச சீதோஷ்ண பேதங்களால் பல தினுசுகளாக மாறுபா டடைந்திருக்கிலா மென்று தெரிகிறது.

வகைகள்

(1) வர்க்கை. (2) கூழை. (3) வேர் பிலா.

1. வர்க்கை —சுளைகள் தடிப்பாயும் பருமனுயு மிருக்கப்பட்ட ஜாதிக்கு வர்க்கை யென்று சொல்லுவார்கள். இதில் சிவப்பு நிறமான வர்க்கையென்றும் மஞ்சள் நிறமான வர்க்கையென்றும் வெளுத்தமஞ்சள் நிறமான வர்க்கையென்றும் மூன்று உட் பிரிவுகள் உண்டு. இச்சுளைகளை ஒடித்தால் இரண்டு துண்டுகளாய் ஒடிந்துவிடும்.

2. கூழை-இதில் விதைகள் பெருத்தும் ஓலையைப் போல் மெல்லியதாயும் பிசுபிசுவென்று ஒட்டக்கூடியதாயுமிருக்கும். இது காயாய்இருக்கும்போது கறிசமைக்க உபகாரப்படுமேயல்லது பழத்திற்கு உதவவே உதவாது. இதிலும் வர்க்கை ஜாதியில் சொன்ன மூன்று உட் பிரிவுகள் உண்டு.

3. வேர் பிலா.—பூமியோடு பூமியாய் வேரிலேயே காய்க்கும் மரங்களுக்கு வேர் பிலா வென்று சொல்லுவார்கள். இது நல்ல ருசிகரமாயிருக்கும். இது ஒரு தனி ஜாதியென்று நமக்குத் தோற்றவில்லை. சீதோஷ்ண பேதங்களைப் பொறுத்து இயற்கையாகவே இப்படி காய்க்கிறதே யொழிய வேறல்லவென்றே நாம் நினைக்கிறோம். ஏனெனில் இந்த ஜாதிவிதை நாமே நேரில் பழம்பறித்துக் கொண்டு வந்து விதைபோட்டு செடி உண்டாக்கியதில் அவைகள் வேரில் காய்க்கவில்லை.

சிலர் வேர் பிலா பழத்தைக் கொண்டுவந்து பழத்தை அறுக்காமல் முழுப்பழமாகவே பூமியில் புதைத்தால் அதிலிருந்து பெரிய மூடு கட்டி ஒரே செடியுண்டாகு மென்றும் அச் செடி வேரில் காய்க்குமென்றும் சொன்னர்கள். நாம் அப்படியே ஒருபழம் கொண்டு வந்து பூமியில் புதைத்துப் பார்த்ததில் பெரும் மூடுகட்டிஒரே செடி உண்டாகாமல் பலமுளைகள் உண்டாகி பல செடிகளாகவே வந்ததால் அதுவும் சரியல்லவென்று தெரிகிறது. ஆகையால்தான் சீதோஷ்ண பேதங்களைப் பொறுத்து இயற்கையாகவே அப்படி சில இடங்களில் காய்க்கிறதென்று நாம் அபிப்பிராயப் படுகிறோம்.

பொதுவாக பிலாவில் மேற்சொன்ன பிரிவுகள் உட்பிரிவுகள் தவிர இன்னும் ஒருவித மான வித்தியாசமும் உண்டு. அதாவது பெரிய பழங்கள் பழுக்கும் மரங்களென்றும் சிறு பழங்கள் பழுக்கும் மரங்களென்றும் இரு வகைப்படும். பெரிய பழங்கள்பழுக்கும் மரங்கள் விரிந்து படர்ந்து சுமார் 40 அல்லது 50 அடி அகலம் வரையில் பரவி நிற்கும். சிறு பழங்கள் பழுக்கும் மரங்களோ விரிந்து படராமல் உயரமாக வளரும். இது 20 அடி அகலத்திற்குமேல் பரவுவதில்லை. இதில் சிறுகாய்கள் தேர் அலங்கரித்ததுபோல் அடி முதல் நுனிவரையில் அலங்காரமாய்த் தொங்கும்.

மண்.—போதுமான ஜலவசதியும் வடிகால் வசதியும் உள்ள செம்மண் சாள் நிலம் சிலாக்கியமானது. களர் இருக்கக்கூடாது. படுகை நிலங்களில் கழிக்கால் நிலங்களிலும் வடிகால் வசதியிருந்தால் அவைகளிலும் பயிர் செய்யலாம்.

உற்பத்தி.—விதைகள் போட்டும், ஒட்டுக் கட்டியும் உண்டாக்கலாம். விதைகள் போட்டு உண்டாக்குவதே சிலாக்கியம். ஒட்டுஅவ்வளவு நல்லதல்ல. எலுமிச்சையைப்போல் அவ்வளவு கஷ்டமான பயிரல்ல. கன்றுகள் எவரும் சுளுவாய்ப் பயிர்செய்து உண்டாக்கலாம். ஆகையால் இச் செடிகள் உற்பத்தி செய்ய விரும்புவோர் தங்களுக்கு எந்த ஜாதிச்செடி உற்பத்திசெய்ய விருப்பமோ அந்த ஜாதியில் நடுவயதுள்ள மரங்களில் நன்றாய் செடியிலேயே பழுத்து தானாய் கீழேவிழும் வரையில் அறுக்காமல் விட்டு அப்படி விழுந்த பழத்தைக் கொண்டு வந்து அறுத்து சுளைகளிலி

ருந்து விதைகளை, விதைகளின் மேல் மூடி யிருக்கும் ஜவ்வுபோன்ற தோல் பின்னப்படா மல் எடுத்து ஈரம் காயுமுன் நாற்றுப் பாவ வேண்டும்.

நாற்றுங்கால் தயார்செய்தல்.—பூமிமட்டத் திற்குமேல் ½ அடி உயரமாக பாத்தி கட்டி, கல் கட்டிகளில்லாமல் நன்ருய்க்கொத்தி அத் துடன் ஆடுமாடுகளின் மக்கின சாணியைத் தூள்செய்து கலந்து பாத்தி நிரவி விதைபாவி மூட்டம்போட்டு தண்ணீர் ஊற்றவேண்டும். நாற்றுப்பாவும் இடங்களுக்குத் தக்கபடி தண் ணீர் நிற்காமலும் ஈரம் காய்ந்து விடாமலும் பதமாகத் தண்ணீர் ஊற்றிவந்தால் சில நாட் களில் முளை கிளம்பி வளர ஆரம்பிக்கும். ஒரு மாதத்திற்குப் பின் கூச்சுக் களையால் செடிக ளுக்குக் காயம்படாமல் களை வெட்டி புல் பூண்டுகளை அப்புறப் படுத்தலாம். சாதா ரணமாய் சித்திரை, வைகாசி, ஆனி மாதங் களில்தான் பிலாப்பழங்கள் காலமாதலால் அப்போது விட்ட நாற்று ஆறுமாதக் காலத் தில் பிடுங்கி நட தயாராயிருக்கும். பெரும் மழைகள் நின்றவுடன் நடுவது சிலாக்கியம்.

செடிகள் வைத்தல்.—செடிகள் வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்ருய் உழுது புழுதியாக்கி வைக்க நாம் உத்தேசித்திருக்கும் ஜாதிக்கும், நிலத்திற்கும் தக்கதாக 20- அடி முதல் 50 அடிக்கு ஒரு செடியாக நட வேண்டும். அதாவதுநாம் கடைசியில்சொன்ன சின்ன பழங்கள் ஜாதியாயிருந்து கிராவல் நில மாயிருந்தால் 20 அடிக்கு ஒரு செடிநடலாம். அதே ஜாதி மரத்தை படுகை அல்லது கழிக் கால் நிலத்தில் நடுவதனுல் 30 அடிக்கு ஒரு செடி நடவேண்டும்.

விரிந்து வளரக்கூடிய பெரிய ஜாதி பிலா வை சரள்கண்டமுள்ள நிலத்தில் நடுவதானுல் 35 அல்லது 40 அடிக்கு ஒரு கன்ருகவும் அதே ஜாதியை படுகை நிலத்தில் நடுவதானுல் 50-அடிக்கு ஒன்ருகவும் நடவேண்டும். ஆக வே நாம் வைக்கும் நிலம், ஜாதி, சீதோஷ்ண பேதம் முதலியவைகளைக் கவனித்து 20-அடி முதல் 50-அடிக்கு ஒரு கன்ருக நட வேண் டும்.

இத்தனை அடிக்கு ஒரு செடி நடுவதென்று தீர்மானித்தபின் குழிகளை அடையாளமிட்டு குறைந்தது 3-அடி சதுரமாவது தோண்டி ஆறப்போட்டு குழி நன்ருய் காய்ந்தபின் வண் டல், எரு முதலியவைகளைக் கலந்து குழிகளை நிரப்பி செடிகளை வைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். எலிமிச்சம் செடிகளைப் போல் இவைகளையும் மாடுகள் மேயாமல் பாதுகாக்க வேலி கட்டவேண்டும். மொத்த விஸ்தீரணத் திற்கு வேலிகட்ட சாத்தியமாகாவிட்டால்அந் தந்த செடிகளுக்காவது போதுமானபடிவேலி கட்டவேண்டும். ஆகவே ஒரு ஏகராவிற்கு 20-முதல் 50-செடி வரையில் வைக்கலாம். மரங்கள் பெரிதாகும் வரையில் இச்செடிக ளின் மத்தியில் காய்கறிப் பயிராவது கேழ்வ ரகு, (ராகி)ப்பயிராவது செய்யலாம். இப்படிச் செய்வதால் இச்செடிகளுக்குத் தண்ணீர் இறைக்குங்கஷ்டம் தோன்ருமற்போவதுடன் அடிக்கடி கொத்தி எருவிடப்படுவதால் செடி களும் வீரியமாய் வளரும். அப்படிப் பயிர் செய்ய சாத்தியமாகாவிட்டால் வாரத்திற்கு இருமுறையாவது தண்ணீர்பாய்ச்சி வருஷத் திற்கு 4-முறையாவது செடியைச்சுற்றி நன் ருய்க் கொத்திவிடவேண்டும்.

இவைகள் சரியானபடி பயிர் செயயப்பட் டால் 7-வது வருஷம் முதலும் அப்படி யில் லாவிட்டால் பயிர் செய்வதற்கேற்றபடி வரு ஷங்கள் பொறுத்தும் காய்க்க ஆரம்பிக்கும்.

ஒரு ஏகராவில் குறைந்தது வருஷத்திற்கு நூறு ரூபாயாவது இலாபம் கிடைக்கும்.

இயற்கை அற்புதங்கள்

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர் பி.ஏ., எல். டி., அவர்கள் செய்தது. ரிடையர்டு ஸகூல் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற ராவ் பஹதூர் L.C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடி யது. இதிலடங்கிய விஷயங்கள்: 1 மழைக்கால்கள்; 2. எரிமலை; 3. பூகம்பம்; 4. வெந்நீர் ஊற்றுகள். 5 கானல் நீரும் அதன் ரூபாந்தரங்களும்; 6 வால் நக்ஷத் திரங்கள்; 7 எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; 8 வானவில் 9. நிழலும் கிரகணங்களும்; 10. ஹாலி வால் நக்ஷத்திரம், 11. மொழி பெயர்ப்பு விளக்கம். இதில் அநேக படங்கள் சேர்க் கப் பட்டிருக்கின்றன. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. அணு 8.

ஆங்கிலேய அரசாட்சியும், அனுமரணமும்

BRITISH RULE AND SUTTEE

[ஸ்ரீமான் டி. எஸ். அனேசய்யரவர்கள்,
எம். ஏ., எல்: டி.]

சாதாரணமாய், இந்து தேச சரித்திரத்தை படிப்பவர் கற்றுக்கொள்ளும் விஷயங்களில், ஆங்கிலேய அரசாட்சியின் முக்கிய நன்மைகள் என்பது ஒரு பாடம். இருப்புப் பாதை, தந்தி தபால், போக்குவரவுக்குரிய சாதனங்கள் என்று அடுக்கப்படும் நன்மைகளில், அனுமரணம் நிறுத்தல் என்பது ஒன்று. பெரும்பாலும் மாணுக்கர்கள், அதன் பொருள் தெரியாமலே பொட்டைப்பாடம் செய்வதும் உண்டு. இந்த அனுமரணம் என்பது யாது, அதன் குணதிசயங்கள் என்ன என்பதே, நமதுவியாசம்.

அனுமரணமென்றால், உடன்கட்டை ஏறுவது என்று பொருள். நாயகனைப் பிரிய இஷ்டமில்லாத பெண்களும், நாயகனின் பிரிவாற்றாமையை சகிக்க முடியாதென்று எண்ணும் உத்தமிகளும், நாயகனுடைய ஜதையிலேயே, உடலை அக்னிபகவானுக்கு தியாகம் செய்வது, பூர்வ காலங்களில் வழக்கமாகஇருந்தது. சககமனம் செய்யாத உத்தம ஸ்திரீகளே கிடையாது. உடலிரண்டாயினும் உயிர் ஒன்றாக இருந்த தம்பதிகள், திரும்பவும், இணை பிரியாது சேரவேண்டும் என்று எண்ணியே, இவ்வழக்கத்தை அநேகர் அனுசரித்து வந்தார்கள். புது வழக்கங்களும், நவீன நாகரிகமும், முற்ற, பழைய வழக்கங்கள் ஒளித்துக் கொள்ள ஆரம்பித்தன. மனமொப்பி, தேகத்யாகம் செய்வது போய், சில பெண்டீர் கட்டயத்திற்காகச் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் தான் ஆங்கிலேய அரசாங்கத்தாரும், அதை நிறுத்த ஆரம்பித்தார்கள்.

ஆங்கிலேய அரசாங்கத்தார், நிறுத்தினதின் பலன் வரவர நன்கு விளங்குகிறது. நாயகனின் பிரிவாற்றாமைக்கு அஞ்சி, ஸகமனம் செய்வது போய், விதவாவிவாகம் புறப்பட்டிருக்கிறது. எண்ணிமாளாத கைம்பெண்களின் கதி, என்னவாகும், இப்புது வழக்கம் ஏற்படாவிடின் ? நாயகன் இறப்பதுதான் தாமதம், இரும்புப்பெட்டிச் சாவியை மடிப்பில் சொருகி விடுகிறார்கள். அழுவதும் கத்துவதும், அன்றொரு நாளே. மறுநாள் எஜமானியாகி விடுகிறார்கள். புதிதாய் வந்த அதிகாரத்தை செலுத்துவதில் கணவனிருந்த வாசனையே மறந்து விடுகிறது. கணவன் இறப்பின், ஜீவனும்சத்துக்கு இருக்காதென்பதே, பெண்களைப் பெற்றவர்களின் குறியாகி விட்டது. பணமும், பூஸ்திதியும் இருப்பின், மாங்கல்ய வாழ்வைப்பற்றின கவலையை எடுத்துக் கொள்ளுவதில்லை.

சீதா, சாவித்திரி, மாத்ரி, கார்க்கேயி வாழ்ந்த பரதகண்டத்தில் இப்படி புராதன ஆசாரம் சீர்குலைந்து போனது நமது தௌர்ப் பாக்கியமென்றே எண்ண வேண்டும். ஆங்கிலேயர்கள், உயிர்நிலையற்ற வழக்கத்தை நிறுத்தினார்களே தவிர, அவர்கள் மீதில் குற்றமில்லை. திருஷ்டாந்தமாக, மேஜர் ஸ்லீமன், பின் வருமாறு எழுதுகிறார் : “நான் 1828 வருஷத்தில், அனுமரணத்தை நிறுத்தும்படி ஒரு அதிகாரியாய் நியமிக்கப்பட்டேன். அக்காலத்தில் சர்க்காரின் சட்டத்திற்கு விரோதமாக நானே, ஒரு பெண்ணிற்கு அனுமரணத்திற்காக அனுமதி கொடுக்க நேரிட்டது. உமத் ஸிங் உபாத்யா என்பவனின் மனைவி சுடுகாட்டிலேயே இருந்து கொண்டு, வீட்டிற்கு வரமாட்டேனென்று ஒரு பிடிவாதமாக, தன் மாமனார் மாமியார் மற்றுமுள்ள பந்துக்களுக்குச் சொல்லிவிட்டாள். அவளைச் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்து, அவளை நயத்தினாலோ பயத்தினாலோ வீட்டுக்கு வரும்படி தூண்டச் சொன்னார்கள். அவர்களுக் கிணங்கி, மறுநாட் காலை, சுடுகாட்டிற்குச்சென்று, அவளை வீடு திரும்பும்படி வேண்டியமட்டும் சொன்னேன். அவள் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டாள். அவள் பந்துக்களின் ஆஸ்தி, வீடு, முதலியவைகளை சர்க்கார் பிடிங்கிக்கொள்ளுவார்கள் என்று பயமுறுத்தினேன். அவள் “இவ்வுலகத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, நேற்று என் நாயகன் இறந்ததும் என் உயிரும், ஆத்மாவும், என்னை விட்டுவிட்டன. அதோ ஆகாயத்தில் என் ஆத்மாவும் அவருடைய ஆத்மாவும், சேர்ந்தாப்போல் தெரிகின்றன பார். உனக்குத் தெரியாது. என் உடல்தானிருக்கிறது.வேணுமானால் ஒரு கத்தி

கையிற் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ ?

யினால் என் கையைக்கிழித்துப்பார். எனக்கு வலியென்பதே கிடையாது. அனுமரணத்திற்கு அனுமதி தந்தால் உமக்கு மிகவும் புண்ணியமுண்டு. இல்லாவிட்டால் இவ்விடத்திலேயே ஆகாரநித்திரையின்றி உயிரை விட்டுவிடுகிறேன். பிறகு, தானே என்னை தகனம் செய்துவிடுவார்கள். உம்மை மிகவும் வேண்டிக்கொள்ளுவது இவ்வளவே. என் நாயகனின் சாம்பலுடன் என் சாம்பலைக்கலக்க அனுமதி கொடும். உமக்குக் கோடிபுண்ணியமுண்டு'' என்று சொல்லிமுடித்தாள். சர்க்கார் ஆக்கினைக்கு விரோதமாயினும், அவள் வேண்டுகோளுக் கிணங்கினவனாய், மறுநாட்காலையில், அனுமரண ஸம்ஸ்காரங்களுக்கு ஏற்பாடு செய்ய உத்தரவு கொடுத்தேன்.

"மறுநாட்காலையில் எல்லாம் சித்தமாயிற்று. நான் அவ்விடத்திற்கு, சில சிப்பாய்களுடன் போனேன். ஒருக்கால் அக்கினியின் தாபத்தை சகியாது, மனம் இளகிவிடுவாள் என்று நினைத்துக்கொண்டேன். குறித்த நாழிகைக்கு அவள் கணவனைத் தகனம் செய்த குழிலேயே, அக்கினிவளர்த்தார்கள். அவள் எனக்கு வந்தனமளித்துவிட்டு, வானத்தை நோக்கி, கைகூப்பினவளாய், புன்னகையுடன் அக்கினி பிரவேசம் செய்தாள். அன்று முழுவதும், என்னை அறியாமலே, அந்த உத்தமியைநினைத்த பொழுதெல்லாம் கண்களில் நீர் பெருகின."

இவ்வாறு ஆங்கிலேயர்களும் கண்டு வியக்கும்படியான உத்தமிகள் 18-வது நூற்றாண்டில்கூட இருந்தார்கள். வரவர, புது வழக்கங்கள் ஏற்பட ஏற்பட, ஆங்கிலேய நாகரீகம் அதிகரிக்க அதிகரிக்க, அனுமரணம் ஒழிர்ததே ஒழிய, ஆங்கிலேய ஆக்கினையால் மட்டும் அழியவில்லை.

இவ்வியாஸம் விதவைகளை அக்கினிக்கு பலிகொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் எழுதினதல்ல. சில கைம்பெண்கள் நல்வழக்கம் தவறாது, பிறருக்கு உபகாரம் செய்பவர்களாய், தேச அபிவிர்த்திக்கு, உடலைத் தியாகம் செய்பவர்களாய், இருக்கிறார்கள். அவ்வாறே ஏனையோரும் தம் காலத்தைக் கழிக்கவேண்டுமென்றே எழுதலானோம்.

—o—

பக்தியின் பெருமை

THE GREATNESS OF BAKTI

[ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய ஐயரவர்கள், M.A.]

அருண்கிரிநாதர் திருப்புகழ்

மாயா சொரூபமான இந்நிலவுலகில் மாந்தர்கள் படுந்துன்பங்கள் எண்ணிறந்தன. அவைகள் இன்பங்களுடன் கலந்தே நேரிடினும், அவ்வின்பங்கள் பின்னும் துன்பங்களையே விளைக்கின்றனவாதலால், அவ்வின்பங்களை இன்பங்களாகக் கருதுவது சரியன்று. இவ்வாறு சகிக்கவொண்ணாத எண்ணிறந்த துன்பங்களும் தங்கள்படையாக தம் பின்னே பல துன்பங்களைக் கொண்டுவரும் சில போலி சுகங்களும் நிறைந்துள்ள நிலையாத சமுத்திரத்தினின்று தப்பி, என்றும் அழியாததும் மெய்யாகவே நமது வீடுமான ஈசனது செவ்விய கழலிணைகளை யடைந்து, பேரானந்தத்தை யடைய விருப்பமில்லாப் பித்தரும் உலகிலுளரென்று எண்ண மனந்துணியவில்லை. ஆனால் மாந்தரெல்லோரும் இவ்வுலகத்தை விட்டகன்று ஈசனது பாதாரவிந்தங்களை யடைய வேண்டுமென்ற எண்ணமே சதாகாலமும் தமது மனத்திற் குடிகொண்டிருக்கச் செய்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஏனெனில், மாயா சொரூபமான இவ்வுலகில் அது இயல்பன்று. ஆயின் இவ்வுலகிற் பிறக்கும் ஒவ்வொருவரும் தமது வாணாளில் ஏதோவொரு காலத்தில் எவ்வளவு முயன்றும் தம்மால் தடுக்க முடியாததும் தமது இதயத்தைப் பிளந்து உலகவாழ்க்கையில் வெறுப்பை யுண்டுபண்ணுவதும், தம்மினும் வலியில் மிக்க விதியை வெல்வ ஈசன் திருவருள் பெற்றோருக்கே சாத்தியமென்ற அறிவை விளைப்பதுமான ஓர் பெருந்துயரத்தை அநுபவிப்பாரென்பது திண்ணம். அக்காலத்தில் இவ்வுலகத்தை விட்டகன்று ஈசனது பாதார விந்தங்களைச் சேர்ந்து அழிவில்லாப் பேரானந்தமடையவேண்டுமென்ற ஆசை அவர் மனத்திலுதிக்குமென்பதற்கு ஐயமேயில்லை. அவ்வாறு உதிக்கும் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கவசியமான ஈசனது திருவருளைப் பெறுவதற்குரிய மார்க்கங்கள் பலவுள. அவைகளில் பக்திமார்க்கம் எக்காலத்திலும் எளிதென்றும் இக்கலி யுகத்தில் அம்மார்க்கத்தைத் தவிர

கைப் பறவையைவிட்டு, காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா ?

வேறு எந்த மார்க்கத்தையுங் கடைப்பிடித்தொழுகுவது சிற்சில பெரியோர்களைத் தவிர மற்றவர்களுக்குச் சாத்தியமல்லவென்றும், ஈசன் திருவருள் பெற்ற பல பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களே இறைவன் தங்களுக்கிட்ட பணியைச் சிரமேற்கொண்டு உலகத்திலுள்ளார் உய்வதற்கென்றே அப்பக்தி மார்க்கத்தின் பெருமையை எடுத்துரைத் தருளியுமிருக்கிறார்கள். அவ்வாறு கூரைக்குங்கால், உலகில் மாந்தர்படும் பல துயரங்களின் காரணங்களையும் சொல்லி யருளியிருக்கிறார்கள். அவ்வாறு உலகத்துக்குப் பேருதவி புரிந்துள்ளபெரியோர்களில் **அருணகிரிநாத வள்ளல் ஒருவர்.**

உலகங்களெல்லாவற்றிலும் ஞானங்குன்றிய காரணத்தினால் பாபங்கள் அதிகரித்துத் தலையெடுத்து நின்றதைக் கண்ணுற்ற முக்கணனைந்தை ஞானதேசிகனான குமாரக் கடவுளை உலகத்துக்குதவி யருளினாரென்பது அன்பர்களனைவருக்கும் தெரிந்த விஷயம். அவ்வாறு உலகத்துக்கு ஞானத்தைப் புகட்டுவதற்காகவே திருவவதாரஞ் செய்தருளிய அக்குமாரக் கடவுளது ஆக்ஞைப்படி அவரது திருவருள் வலியால் அவரால் தடுத்தாட்கொள்ளப்பட்ட அருணகிரிநாதப் பெருமான், உலகம் உய்யும் பொருட்டு இசைத்தமிழால் அக்கடவுளது திருப்புகழை எடுத்துரைத் தருளி, பக்தி மார்க்கத்தைப் போதித்து ஞானத்தைப் புகட்டி யிருக்கிறார். அப்பாமாலைகள் பல நூல்களாகத் தொகுக்கப்பட் டிருக்கின்றன. அந்நூல்களிற் பாடற்றொகையில் மிகப்பெரியது 'திருப்புகழ்' என்ற நூல்தான். அந்நூல் ஆதியில் பதினாறாயிரம் பாடல்கள் அடங்கியது. பல காரணங்களினால் இவைகள் சிதறி மறைந்தன. இருபது வருஷங்களுக்கு முன், தென்னாட்டில் ஒருவருக்காவது நூறு அல்லது இருநூறு பாடல்களுக்குமேல் தெரியாது. இவ்வாறிருக்கையில், குமாரக் கடவுளது மெய்யடியார்களிற் சிறந்தவரான காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆண்டவன் திருவருளால் உலக மேம்பாட்டுக்கென்றே அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய பாடல்கள் மறைந்து கிடந்ததைக் கண்டு வருந்தி, மிகுந்த பொருள் செலவழித்து பலரிடமிருந்து அப்பாடல்களடங்கிய ஏட்டுப்பிரதிகளைச் சம்பாதித்து தமது நிகரற்ற விடா முயற்சியால் 1231 பாடல்களைச் சேர்த்து, ஏட்டுப் பிரதிகளிற் புகுந்திருந்த பல பிழைகளைத் திருத்தி அச்சிட்டு, தமிழ் நாட்டவருக்கு மறக்கத்தகாத பேருதவி புரிந்தார்.

இனி, அந்நூலைப் படிப்பதனால் மானிடர் பெறும் பயன் யாதெனக் கூறுவோம்.

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக்கிளையோன் திருப்புகழைக்
கூறினோர்க் காமே மிக்கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

இத்தனை பயன்கள்தாம் சிறப்புப்பாயிரத்திற் கூறப்பட்டுள்ளன. ஆயின், கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமான குமாரக்கடவுளது திருப்புகழை அன்புடன் ஓதுவாருக்கு அவ்வாறு ஓதுவதினா லுண்டாகும் பயன்கள் அக்கடவுளது கல்யாண குணங்களைப் போலவே எண்ணிறந்தன. இவ்வுண்மையை வற்புறுத்துமாறே, அருணகிரிநாத சுவாமிகள்,

"வேண்டியபோதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறாதுதவு பெருமாளே"

என்று திருவாய்மலர்ந் தருளினார். அத்தகைய வள்ளலை யாவரும் வழிபட்டு, அவரது அருளைப்பெற்று, இகபர சுகங்களை யடைந்து அநுபவித்து சுகவாரிதியிற் சேர வேண்டுமென அவ்வாளவர்தானுடைய திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

இனி, அருணகிரிநாதசுவாமிகள் இறைவன் ஆணைப்படி பாடியருளிய பாடல்களைக் கவனிப்போம்.

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையன
மூட்டியுலைக் கீய்ந்தமழு வாமெனவி காசமொடு [ல்
மாட்டியெனைப் பாய்ந்தகட வோடமொ டாடிவிடு
—விஞ்சையாலே

வாய்த்தமலர்ச் சாந்துபுழு காரபனி நீர்களொடு
காற்றுலவாத் தாங்குவளை மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமெகிழ்
—வன்பு கூரத்

நீட்டுவிழிக் காத்திமட வார்களுட னுடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமெனு
சேர்த்துவிடப் பேர்ந்துவினை மூடியடி யேனுமுன
—தன்பின்மல்

கொக்குக் கூட்டத்தில் ராஜாளி விழுந்தாற்போல.

தேட்டமுறத் தேர்ந்தமமிர் தாமெனவே பேசிகம
ஞேட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சிட்டேவரக் காண்டேலி காலனனுகா சினருள்

—அன்பு தாராய்;

[முற்பிறப்புக்ளில் நான் செய்த நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளும் என்னை வளைத்து நின்று ஆசைகளில் முக்கியமானவைகளாகக் கூறப்படும் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை ஆகிய மூவாசைகளான மூன்று அக்கினிகளை மூட்டி உலையிலிட்ட மழுவை யொத்த ஜோதியை யடையும்படி அவைகளை வளர்த்து, அவைகளினூடே என்னைப் பாய்ச்சி வாட்டி, என்னை நல்வழியிற் செல்லவொட்டக் கூடாது என்ற தீர்க்க வைராக்துடன் தமக்கு இஷ்டமான வழியில் என்னைச்செலுத்தும்மாய வித்தையின் பலனக, நான் புஷ்பங்களையும், கஸ்தூரி, புனுகு முதலிய வாசனைகளையும், தேகத்தின்மீது காற்று வீசுவதை தடுக்கக் கூடிய அநேக இரத்தின மாலைகளையும் அவைகளைப் பூணுதல் எனக்கே தகுதியென எண்ணிப் பூண்டு, எனது அழகையும் அலங்காரத்தையும் கண்டு மனமகிழ்ச்சிகொண்டு, ஸ்திரீகளிடத்தில் காதல்கொண்டு,மைதீட்டியகண்களையும் காந்தி பொருந்திய தேகத்தையுமுடைய பெண்களுடன் விளையாடி, அவர்கள் வீசும் மோக வலையிற் சிக்கி, பல வியாதிகளினுற் பிடிக்கப் பட்டு, பிறகு அவர்களைவிட்டுப் பிரிந்து, உன தன்பில்லையேயென்று வருந்தி, அதை யடையும் நெறி யாதென ஆராய்ந்து, ஓர் நெறியைக் கண்டு இதுவே அந்நெறியெனத் தீர்மானித்து, அந்நெறியைக் கடைப்பிடித் தொழுகிக்கொண்டு வருகையில், நமன் வெகுண்டு அனுப்பியதும் பிரமன் எனது விதியை எழுதி யருளியதுமான சீட்டைக்கண்டு, காலன் வெருண்டு எனது உயிரைக் கவர்ந்துபோக என்னை அணுகுவான். அவன் அணுகாவண்ணம் நினது அருளையும் அன்பையும் எனக்கு நீ தந்தருளவேண்டும்.]

'இதனல் உலகத்தில் மானிடர் படுந்துன்பங்களுக்கு அவர்கள் முற்பிறப்பிற் செய்த இரு வினைகளே காரணமென்று தெரியவருகிறது. அவைகளே மனிதரை ஆசையாகிய சாகரத்தல் வீழ்த்துகின்றன. அவைகளே மாயையின் உதவியினுல் மனிதர் மதியை மயக்கி அவர்களை விஷய சுகங்களிற் பிரவேசிக்கச் செய்கின்றன. அவைகளே ஓயாது மனிதரைப் பிறவிக் கடலில் வீழ்த்துகின்றன. "இருவினை யிடையிட்ட கொடியேனடியேன்" என்றும் சுவாமிகள் ஓரிடத்தில் கூறியிருக்கிருர். மாறிமாறி நல்வினை தீவினைகளைச்செய்துகொண்டு எண்ணிறந்த பிறவிகளுக்கு வழிதேடிக்கொள்ளுகிருர்கள் உலகிலுள்ளோர். இவ்விரு வினைகள் வேரோடு அற்ருலொழிய ஜனன மரணங்களுக்கு முடிவு ஏற்படாது. ஆதலால், வினைகளைத் தீர்த்துக்கொள்ளல் நமது நோக்கங்களிலொன்ருக இருக்கவேண்டும்.

இப்பாடலில் ஆசைகளில் முக்கியமானவைகள் மூவாசைகளெனக் கூறி, பிறகு பெண்ணாசையைப்பற்றியே விசேஷமாகச் சொல்லியிருக்கிருர். மூவாசைகளில் பெண்ணாசையே மற்றவிரண்டு ஆசைகளுக்குங் காரணமாக சுவாமிகள் கருதுகிருர்கள்.

"தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையிலெழுதியு மனைவயி னுறவிடு—வதனுலே
தனயர் அனைதமர் மனைவியர் சினகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
தவன சலதியின் முழுகிய விடர்படு துயர்தீர"

என்ருர். நீ பெண்ணாசையிற் படக்கடவாய் என்று மனிதன் தலையில் எழுதியதனுற்ருன், குடும்பம், சிநேகம், பொருள் இவைகளில் அவனுக்கு ஆசை உண்டாயிற்றென அபிப்பிராயப்படுகிருர்.

அதுவுமன்றி, எவ்வாசையை அகற்றினுலும் அகற்றலாம். பெண்ணாசையை விடுவது யார்க்கும் அசாத்தியம்.

" பழுதற வோதிக்கடந்து பகைவினை நீரத்துறந்து
பலபல யோகத்திருந்து—மதாராஜன்
பரியன பாணத்தயர்ந்து பனிமடலூர்தற் கிசைந்து
பரிதவி யாமெத்தநொந்து—மயல்கூர

அழுதழு தாசைப்படுங் கணபிணைய மாதர்க் கிரங்கி
யவ விழி பாணத்துநெஞ்ச—மறைபோய்கின்
றழிவது நான்முற்பயர்த விதிவச மோமற்றை யுன்ற
னருள்வச மோஇப்ரமத்தெ—ரிகிலேனே ;"

[கற்கவேண்டிய யாவற்றையும் கசடறக்கற்று, பகை வினை இவைகளை முற்றுந்துறந்து பல விதமான யோகப் பயிற்சிகளைச் செய்தபின்னும் மன்மத பாணத்தினுல் வாடிபெண்களது பார்வையிற் சொக்கி ஆசையினுற் கலங்கி நான்

அழிவதற்குக் காரணம் என் விதியோ உனதருளோ?]

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து—மதனுலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து—மிகவாடி;
'கலவிதனி லமர்ப்ப சுகமா இனுமா [தே;"
அனுபவ மிதுசற்றும் விடவோ இயலா—தியலா

இவைகளினுல் பெண்ணுஸைசயை விலக்குவது சகல கலைகளும் வல்லவர்களுக்கும் பெரிய யோகிகளுக்கும் துறவிகளுக்குங்கூட மிகவும் அரிதென எண்ணவேண்டி யிருக்கிறது.

உலகத்தில் மனிதர்களுக்கென்று கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சுகங்களில் ஏன் மனிதர் ஆசை வைக்கக்கூடாது என்ற கேள்வி பிறக்கலாம். அதற்கு சுவாமிகள் தெளிவாக பதிலளிக்கிருர்.

" பரகதி பெறுவதொழிந் திடர்வான
பரிசன தெரிசன கந்த வோசைகள்
பலகல விதமுள துன்ப மாகி—மயங்கிடாதே
பரிபுர பதமுள வஞ்ச மாதர்கள்
பல்பல விதமுள துன்ப சாகர
படுகுழி யிடைவிழு பஞ்ச பாதக—னென்றநிர்வேன்;

[நான் பரகதி பெறும் மார்க்கம் அற்றுப் போகும்படி உண்ணல், பரிசித்தல், தரிசித்தல், முகத்தல், கேட்டல் ஆகிய சுகங்கள் போன்ற துன்பங்களில் மயங்கி இச்சை வைத்து, தண்டைகளை யணிந்த பாதங்களை யுடையராய் பேரின்பத்தைத் தேடும் நெறியினின்று என்னை தங்கள் உருவத்தினுலும் மொழிகளாலும் நடையுடை பாவனைகளாலும் வஞ்சித்து இழுத்து, தங்கள் அடிமையாக்கிக் கொள்ளும் மாதர்களது பற்பல விதமான துன்ப சாகரமான பொய்க் குழியில் விழுந்து பஞ்ச பாதகங்களைப் புரிகிறேன், என்று நான் அந்நெறி விட்டு அகலுவது?]

ஆகையினுல் விஷய சுகங்கள் மனிதனைப் பரகதி பெறும் மார்க்கத்தினின்று மயக்கி யிழுத்துக்கொண்டு போதலாற்ருன் என்று ஏற்படுகிறது. அச்சுகங்களை மனிதன் வெறுத்துவிட வேண்டுவது அவசியமாகிறது. (தொடரும்)

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

(ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவாகள்
பி. ஏ., எல். டி.)

மணி உருவமான சுழிபுடகம் என்னும் கருவி

இக்கருவி, ஆழ்ந்ததண்ணீரில் முக்குளித்து பவளம் எடுப்பதற்கோ, கட்டட வேலை செய்வதற்கோ சாதகமானது. நீண்ட சங்கிலிகளால் இதை ஜலத்தின்கீழ் வெகு தூரம் அமிழ்த்தினுலும், நீரின் மேற்புறமிருந்து வரும் குழாய் மூலமாய் இதற்குள்ளடைக்கப்படும் காற்றின் அபேத்யத்துவம் என்னும் குணத்தால் ஜலமானது இவ்வியந்திரத்தின் உட்புறத்தில் மிகவும் கொஞ்ச உயரத்திற்கு மேல் எழும்பாமலிருக்கும்படி தடுக்கப்படும். குளிகாரர்கள் ஆழ்ந்த தண்ணீரில் மூழ்கி வேலைசெய்து, வேண்டும்போது, இதற்குள் வந்து சுவாஸத்திற்கு வேண்டிய காற்றை உட்கொள்ளுவார்கள்.



Fig. 1.

அசேஷ்டனம் (தொடர்ச்சி)

பந்தய ஓட்டத்தில், மனிதரோ, குதிரையோ ஓடி, பந்தயம் கெலிப்பதற்குரிய ஸ்தானம் அடைந்தும், உடனே நிற்காமல், கொஞ்ச தூரம் ஓடி, மெல்ல மெல்ல நிற்பதை பலர் பார்த்திருக்கலாம். பாய்ச்சல் பந்தயம் ஓடுகிறவன் கொஞ்சதூரம் ஓடிவந்து தாண்ட வேண்டிய இடத்தை யடைந்ததும், கிளம்பிப் பாய்வதும் அனுபவசித்தமே.

சுமார் ஒரு கஜம் நீளம், அரை அங்குலம் கனமுள்ள ஒரு மரக்கோலின் நுனிகளை இரண்டு கண்ணாடி டம்ளர்கள்மேல் வைத்து கனமான தடியால் அம்மரக்கோலின் மத்திய பாகத்தில் கெட்டியாய் அடித்தால், மரக்கோல் ஒடியுமே தவிர, கண்ணாடி டம்ளர்களுக்கு யாதொரு சேதமும் ஏற்படாது.

ஒரு கயிற்றின் நுனியில், அது தாங்கக் கூடிய, கல் அல்லது இரும்புக் குண்டை பாரமாய்க் கட்டித் தொங்கவிட்டு, அதன் கீழ் புறத்தில் அவ்வித கயிற்றுத் துண்டைக் கட்டி திடீரென்று இழுத்தால் கீழுள்ள கயிறு தெறிபடும். கீழ் கயிற்றையே ஒரேவிதமாய் மெல்ல இழுத்தால், மேற்புறமுள்ள கயிறு அறுந்து பாரம் விழுவதைக் காணலாம்.

நூலின் ஓர் நுனியில் ஒரு கல்லைக் கட்டி மற்றொரு நுனியை கையில் பிடித்துக் கொண்டு சுழற்றினால் அக்கல்லானது சக்கிர வடிவமாய்ச் சுழலும். அப்படி சுற்றும்பொழுது, கையிலுள்ள கயிற்று நுனியை விட்டு விட்டால், தக்ஷணமே அக்கல்லானது அச்சமயத்தில் சலித்துக்கொண்டிருந்த திசையின் நேர் கோடாய் விரைந்து ஓடுமேயொழிய, முன்னிருந்த வட்டமான சலனம் அதற்கு ஏற்படாது.

ஓர் மெழுகு வத்தியை இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு, மத்தியில் விரலை வைத்து, நுனிகளைக் கொஞ்சம் இழுத்தாற்போல் வெகு விரைவாய் வளைத்து ஒடித்தால், அதிலுள்ள நூல்வத்தியும் அறுபட்டு, மெழுகு வத்தி இரண்டு துண்டாகும். இக்காரியத்தையே மெதுவாயும் அஜாக்கிரதையாயும் செய்தால், மெழுகுவத்தி சரியாய் ஒடி படாமலிருப்பதும், ஒரு சமயம் அதிலுள்ள வர்த்தி ஒரு பக்கத் துண்டிலிருந்து உருவி வெளி வருவதும் பரீக்ஷணத்தால் அனுபவ சித்தமாகும்.

ஈரமான உடுப்புகளை உலர்த்துவதற்கும், சர்பத்து, சர்க்கரைப்பாகு இவைகளில் ஏற்படும் சர்க்கரையின் பளிங்குத் துண்டுகளை (Crystals) இவற்றிலிருந்து விலக்குவதற்கும் நவீனமாய் ஏற்பட்டுள்ள கருவிகளின் செயலும், அசேஷ்டனம் என்னும் குணத்தை ஆதாரமாயுள்ளதே. பக்கங்களில் துவாரங்கள் நிறைந்துள்ளதும், ஸ்தம்ப வடிவமுமான (cylindrical) ஓர் பெரிய பாத்திரத்தில் நனைந்த உடுப்புக்களையோ, அடியில் சர்க்கரைப் பளிங்கு படிந்துள்ள சர்பத்தையோ வைத்து அப்பாத்திரத்தை வெகு விரைவாய்ச் சுழற்றினால், ஜலம் அல்லது சர்பத்தானது மிகவும் சன்னமான திவலை ரூபமாய்ப் பிரிந்து, துவாரங்கள் வழியாய் வெளிவந்துவிடும். சலிக்கும் வஸ்துவுக்கு, இடையூறு ஏற்பட்டாலொழிய, சலன திசையின் நேர்கோடாய்ப் போவதே இயல்பு என்று அறியலாம்.

இதையே அடியிற் கண்ட பிரத்தியக்ஷ பரீக்ஷணத்தால் நன்குணரலாம். Fig. 2.

ஓர் சிறு கிச்சிலி அல்லது கமலாப்பழத்தில் நெருப்புக்குச்சி போன்ற ஒரு சிறு குச்சியை அதன் இரு நுனிகளும் பழத்துக்கு வெளியில் சற்று நீண்டு நிற்கும்படி நுழைத்து, அக்குச்சி நுனி ஒன்றில், ஒரு மெல்லிய கயிற்று முனையைக் கட்டவேணும்.

இக்கயிற்றின் மற்றொரு நுனியை ஒரு ஊசிக்காதில் நுழைத்து, குளைச்சு முடிபோட்டு அவ்வூசியை முனைப்புறமாய் ஒரு நெட்டித் துண்டில் (Cork) கெட்டியாய்க் குத்திச் சொருகவேணும். மேற்கண்ட நெட்டித்துண்டை மூன்று முள்கரண்டிகள் (forks) அல்லது பேனாக்கத்திகளில் சொருகி, அது விழாதபடி நிறுத்தி, முள்கரண்டிகளை ஒரு தாலத்தின் மேல் (saucer) நிற்கவைக்கவும். இந்த தாலத்தில் மணலை இரண்டு குவியலாய் பரப்பி, மேற்கண்ட கயிற்றின் நுனியிலிருந்து தொங்கும் பழத்தை ஆட்டிவிட்டால், அது கெடியாரத்தில் தொங்கக்கட்டின, பெண்டுலம் என்ற பாரம்போல், அங்குமிங்கும் அசையும். அப்பழத்தின் கீழ்ப்புரத்தில் நீண்டிருக்கும் குச்சி நுனியானது மேற்சொன்ன மணல் குவியலின்மேல் உழவு சால்போல் கோடிடும்படி ஏற்படுத்தவேணும். இவ்விதம் பழம்அசைந்து கொண்டிருக்கும்போது, மேற்குறித்த தாலத்தை, அதின் மேலுள்ள ஏற்பாடு அசைவுபடாமலிருக்கும்படி, வெகு ஜாக்கிரதையாய் சுழலும்படி செய்தால், பழமானது தான் அசையும் திக்கு வேறுபடாமல் ஒரே திசையாய் ஆடிக்கொண்டிருக்கும். எவ்வஸ்துவும் ஏதாவது திசையில் சலித்தால், அதன்மேல் ஏதாவது விசை தாக்கினாலொழிய, இயல்பான அசேஷ்டனமென்னும் தர்மத்தால், அத்திசையிலே அசைந்துகொண்டிருக்கும் என்பதற்கு இதுவே ஓர் நிதர்சனம்.

கொடுக்கிறவன் பழனியாண்டி, தின்கிறவன் சுப்பனாண்டி

ஓர் நீண்ட கயிற்றின் நுனியில் ஒரு கனமான பாரத்தைக் கட்டி பெண்டுலம்போல் (Pendulum) அசையச் செய்தால், அது சலிக்கும் திசை ஒரே சமக்ஷேத்திரத்தில் (same plane) இருக்கும், ஆனால், பூமியுடன் நாமும் ஸதா சுழன்றுகொண்டிருப்பதால், மேற்சொன்ன ஸமக்ஷேத்திரம் பேதித்துக்கொண்டிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. இவ்

Fig. 2.



விதபேதம் ஒருநாள், ஒருமணி அல்லது வேறு அளவு நேரத்தில், நாம் பூமியில் வசிக்கும் ஸ்தலத்தை உத்தேசித்து ஏற்றக்குறைச்சலாயிருக்கும். சூரியன் நக்ஷத்திரங்கள்முதலியன ஸ்திரமாய் நிற்கின்றனவென்றும், பூமி தன்னைத் தானே சுற்றும்படி அசைவதால், சூரியன் முதலியன ஆகாயத்தில் அசைவதாய்த் தோற்றுவதாகப் பிரகிருதிசாஸ்திரவித்துவான்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, பல நியாயங்களைக்கொண்டு ஊகித்துக் கண்டுபிடித்திருந்தபோதிலும், பூமி சுழல்வதை ருஜுப்படுத்தக்கூடிய பரீக்ஷணத்தை முதன்முதலில் பாரிஸ் நகரத்தில் பிரஞ்சுதேச வித்வான் (Foucault) ஒருவர் சுமார் 164 அடி நீளமுள்ள கயிற்றில் கட்டப்பட்ட பெண்டுலத்தால் செய்து காண்பித்ததாகத் தெரியவருகிறது.

பூதத்வ போதினி
(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)
எம். ஆர். சுப்பிரமணியம், பி. ஏ., எல். டி., அவர்கள் எழுதியது. அநேகம்படங்களுடன் விலை அணா 8

வஸந்த மந்திரம்

ஏழாம் அத்தியாயம்

அக்கினிப் பிரவேசமும் - சேனை மாய்தலும்

அகோர துர்க்கத்தில் கோயிலின்முன்னே ஒரு பெரிய குண்டத்தில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கின்றது. ஆண்பாலரும், பெண்பாலரும் கோயிலுக்கு வருகின்றனர். பூஜை செய்து துளஸி வாங்கிக் கொண்டனர் எல்லோரும். உடனே பெண்டிரெல்லாம் மாலையணிந்து புதிய ஆடைகளுடனே தலைமுதல் கால்வரையில் ஆபரணங்களை அணிந்தவராய் அக்கினியை மும்முறை வலம் வந்து அக்கினி பகவானிடம் அடைக்கலம் புகுந்தனர். மற்றும் சில ஸ்திரீகள் வீரர்களைப்போல் ஆடையுடுத்து வில்லும் வாளுமேந்தித் தத்தம் புருஷனுடன் சண்டைக்குப் புறப்பட்டனர். தேவனுடைய பிரசாதமாகிய திருத்துழாயை முடியிற் சூடி, ஸாலிக்கிராமங்களைக் கழுத்தில் கட்டிக்கொண்டு, மஞ்சள் வஸ்திரம் உடுத்து, தம் ஜனங்களை ஆலிங்கனம் செய்துகொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டனர். மணக்கோலத்துடன் மாப்பிள்ளைகள் புறப்படுவதுபோல் எல்லா வாயில்களையும் திறந்துகொண்டு ஒருங்கே வெளிக்கிளம்பி வரிசை வரிசையாய் நின்றனர் இராஜபுத்திர வீரர்.

நின்ற இராஜபுத்திர வீரர்களை பிரதாபசிங்க ராஜன் பார்த்து "ஐயன்மீர்! உமது தேசாபிமானத்துக்காகவும், மதாபிமானத்துக்காகவும் இன்று கூடியமட்டில் கடுமையாய்ச் சண்டை செய்துஉயிர்விடப்போகிறீர்கள். இன்றையயுத்தத்தின் முடிவு எப்படியாகுமென்று யாரால் சொல்லக்கூடும்? ஒருக்கால் நாமே ஜயமடையலாம். நானும்உயிரோடிருக்கக்கூடும். அப்பொழுது மறுபடி இங்கு சேர்ந்து நமது தேவாதி தேவனான கைலாச நாதனைத் தொழுவோம். எனது துரதிருஷ்டவசத்தால் யான் இந்த யுத்த பூமியில் படுவேனாயின் இதோ என் வலப்பக்கத்தில் நிற்கும் இந்த ராமஸிங்கருக்கு எனது நாட்டைக் கொடுங்கள். இவன் எனது வம்சத்தைச் சேர்ந்தவன் என்பது உங்களுக்கே தெரியும். என் தலைக்குமேல் பிடித்திருக்கும் இக்குடையை எனக்குப்பின் இராமசிங்கருக்குப் பிடியுங்கள். என்னிடம் எம்மாதிரி பயபக்தியுடன் நடந்து வந்தீர்களோ,

அப்படியே அவரிடத்திலும் நடந்து கொள்ளுங்கள். இனி யுத்தத்துக்கு முன் செல்லுங்கள். ஈசனருளால் இரஜபுத்திரர் ஜயமடைவார்கள்" என "ஹர! ஹர மஹாதேவ!" என்று கூப்பிட்டுக்கொண்டு முன் சென்றனர் எல்லோரும் ஒருமிக்க.

சென்ற வீரர்களுக்குள் தாரதம்யமே கிடையாது. எல்லோருக்கும் ஒரே மாதிரி உடைதான். அரசனுக்கும் அப்படியே மேலே பிடித்திருக்கும் குடை தவிர, வேறு கிரீடமென்றும், மாலையென்றும், ஆபரணங்களென்றும், இராஜ சின்னங்களே கிடையாது. பிரபுக்களுக்கும் அவ்வாறே. இரஜபுத்திர குலத்தில் பெரியார் யார்? சிறியார் யார்? காலில் மிதியடியின்றி தலையில் ஈசுவரப் பிரஸாதமான பூக்களைத்தவிர வேறு முடியாவது மாலையாவது இல்லாமல் ஆண் வீரரும் பெண் வீரரும் புறப்பட்டனர்.

அவர்களின் நோக்கமெல்லாம் எதிரியின் மத்திய பாகத்தை எதிர்க்கவேண்டும் என்பதுதான். நட்டநடுவில் (தாமரைமத்தியில் வண்டு போன்று) ஆமத் பாக்ஷாவின் யானை சக்கரவர்த்தியைத் தாங்கி நின்றது. அவனுக்குப் பின்னே மஹமதியருக்கு உரிய பிறை வடிவக் கொடியும், பாக்ஷவின் சொந்தக் கொடியான கரடிக்கொடியும் பறந்தன. இரண்டிலும் கொரானிலிருந்து பல வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன. அவவிடத்தை முதலில் எதிர்த்து, கொடிகளைப் பிடுங்கிக்கொண்டு சக்கரவர்த்தியையும் எதிர்க்கவேண்டுமென்று இரஜபுத்திரருக்கு எண்ணம். ஏகோபித்து அனைவரும் ஒரே எண்ணத்துடன் முன்வந்து துருக்க சேனைக்கு முன்னிருக்கும் தடைச்சுவர்களையும் முட்புதர்களையும் ஒரு நொடியில் பிடுங்கி எறிந்தனர். அங்கே காவலிருந்த வீரர் பயந்து புறங்கொடுத்தனர்.

புறங்கொடுத்த வீரரைப் பார்த்துப் பின்னின்ற சேனைகள் சற்றே தயங்கின. இதற்குள் கூட்டம் கூட்டமாய் இராஜபுத்திரர் முன் வரவே, சேனைமுழுவதும் கலங்கிப்போயிற்று. என்ன செய்வதென்று தெரியாமல் சிலர் கூக்குரலிட்டார்கள். சிலர் ஆயுதங்களை எறிந்துவிட்டுப் பிரமித்துப்போய் நின்றுவிட்டனர். சிலர் எதிர்த்தனர் தைரியமாய். சிலர் புறங்கொடுத்து ஓடத் தொடங்கினர்.

இதுகாறும் இராஜபுத்திரர் இங்ஙனம் துணிந்து வரவில்லை. இதுவரையில் 4, 5 தடவை சண்டை நடந்ததென்றாலும், ஒவ்வொரு சமயத்திலும் தங்களிடத்திலிருந்து சண்டைசெய்வார்களேயன்றி, முன்வந்து எதிர்க்கவில்லை. ஒருதடவை தடைச்சுவரின்மேல் நின்று, அம்பு மாரி பொழிந்தனர். அப்பொழுது கூட அவர்கள் எதிரியை ஜயிக்கமுடியாதென்று கண்டு ஒழுங்கு கலையாமல் மறுபடி கோட்டையினுட் சென்றனர். இப்பொழுதோ தடைச்சுவர்களும், படல்களும், செடி, புதர்களும், பஞ்சாய்ப் பறந்தன. எங்கே பார்த்தாலும் இராஜபுத்திரர்—இராஜபுத்திரரேம்! "ஹர! ஹர! மஹா தேவ!" என்ற சப்தமின்றி வேறு குரலே கேட்கவில்லை அம்புகளாலும் வேலாலும் குத்துண்டு குதிரைகள் தொப்! தொப் என்று கீழே விழுந்தன. மனிதர்கள் பர்வதம்போல் சாய்ந்தனர்.

இவ்வலங்கோலத்தைக் கண்ட சுல்தான் ஆமத் பாக்ஷாவுக்கும் சற்றுநேரம் ஒன்றும் தோன்றவில்லை. சுத்தவீரனுடையால் பயத்தை ஒழித்து, எதிரிகளின் தொந்தரவைக் கவனியாமல் சிங்கம் கர்ஜிப்பதுபொல் கம்பீரமான வலுத்த குரலுடன் தன் சேனைத்தலைவர்களை ஒருங்கே கூட்ட முயன்றான். இறைவன் குரலைக்கேட்டு ஓடும் சேனை கொஞ்சம் நிதானித்தது. இதுதான் நல்ல சமயம் என்று மறுபடி உற்சாகப்படுத்தினான். தீன் தீன் என்று முழு பலத்துடன் கதறினான். முகம் சிவிர்த்தது. தலையை அசைத்து, எதிர்த்து வரும் மனிதர்களைக் கொல்லவரும் காளைபோல், மஹமதிய வீரர்கள் பயத்தைக் கைவிட்டு ஆயுதங்களைக் கைக்கொண்டு தீன்! தீன்! என்று சப்தம் செய்துகொண்டு தமது சக்கரவர்த்தியை நோக்கிப்பார்த்தனர். சுல்தானும் முன்னே செல்லும்படி உத்தரவுசெய்தான்.

செய்தும் பயன்படவில்லை. ஆமத்பாக்ஷாவின் அம்பராவில் குத்திக்கொண்ட அம்புகளுக்கும் வேலாயுதங்களுக்கும் கணக்கேயில்லை. தேகமெல்லாம் காயப்பட்டும், அந்த யானை சற்றேனும் அசையவில்லை. அவனுடைய மெய்க்காப்பாளர்கள் ஒரு அம்பாவது தமது நாயகன்மேல் படவொட்டாமல் தடுத்தனர். தங்கள் எண்ணப்படி சுல்தானைக் கொல்ல முடியாதபோது, முன்னிலும் பதின்மடங்கு

கொடுக்கிறதையும் கொடுத்துக் குஷ்டரோகி காலில் விழுவானேன் ?

கோபத்தோடு எதிர்த்துக் குத்தினர். நெருக்கிய இராஜபுத்திரர்களைத் துண்டு துண்டாய் நறுக்கினர் துருக்கவீரர். எத்துணை நேரம் தான் அம்மெய்க் காப்பாளர் கணக்கற்ற இராஜபுத்திரர்களை எதிர்க்கமுடியும்? ஒருவர்பின் ஒருவராய் மடிந்தனர். ஒரு சிறுவன் மட்டும் தலை பிளக்கப்பட்டு "மங்களபாய் மங்களபாய்! இனியுன்னைக் காண்பேனோ!" என்று ஓலமிட்டுக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சையடைந்தான்.

தன் திறத்தார் செய்வதெல்லாம் பயனற்றுப் போவதையும், ஒருவர்பின் ஒருவராய் இராஜபுத்திரர் முன்னே துண்டிக்கப்படுவதையும், மஹமதிய சேனை பயத்தைவிட்டு முன்னே செல்ல வாரம்பிப்பதையும் தூரத்தில் நின்று பார்த்திருந்த ராமசிங்கன் ஓரே ஓட்டமாய் ஓடிவந்து, தன்மேல் பாயும் அம்புகளைத் தட்டியெறிந்து, வேலாயுதங்களைக் கேடயத்தால் தடுத்துக்கொண்டு ஆமத்பாக்ஷா நிற்குமிடத்துக்கே சென்று, இப்புறமும் அப்புறமும் இருப்பவரை வாளாயுதத்தால் வெட்டித் தள்ளி யானையின் அண்டையில்வந்து அம்பாரி கட்டியிருக்கும் கயிற்றை யறுத்துவிட்டான். அம்பாரி புழுதியில் புரண்டது. ஆமத்பாக்ஷா தலைகீழாய் மண்ணில் விழுந்தான். மஹமதியர் "ஓஹோ ஓஹோ" என்று கூவினர். விழுந்த சுல்தானை அவ்விடத்திலேயே கொன்றுவிட, எண்ணில்லா இராஜபுத்திரவீரர் நெருங்கினர்.

ஆமத்பாக்ஷா, பக்கத்தில்கிடந்த ஒரு நீண்ட வேலாயுதத்தை எடுத்துக்கொண்டு இமைப்பொழுதில் புழுதியை விட்டெழுந்து தன்னைக் காத்துக்கொண்டான். ஆயுதத்தை உபயோகிக்கும் திறமையினாலும், புஜபலத்தினாலும், பின்வாங்கா மனோதிடத்தினாலும், ஒரு மனிதனையாவது தன்னிடம் நெருங்கவிடாமல் காத்துக்கொண்டான். இராஜபுத்திரர் தயங்கிப் பின்னடையவே, மஹமதிய வீரன் ஒருவன் இறந்துபட்டதினால் சும்மா நின்ற ஒரு குதிரையை சற்றுதூரத்துக்கப்பால் கண்டு, அதன் பேரில் தாவி யேறிக்கொண்டு, தான் இறந்தானென்று எண்ணித், தன் சேனை பின்னடையாமல் இருக்கும்பொருட்டு "தீன்! தீன்! தீன்! தீன்!" என்று இடிமுழக்கம் போல் கர்ஜித்தான். சக்கரவர்த்தியை மறுபடி கண்ட வீரர்கள், சந்தோஷத்துடன் "தீன்! தீன்!" என்று ஆர்த்து அவனைச் சூழ்ந்தனர்

இராஜபுத்திரர்களுக்கு உற்சாகம் அடங்கிவிட்டது. ஒருவர் ஒருவராய் எத்தனையோ பேர் மாண்டுவிட்டனர். பிரதாபசிங்கரும் தன்னால் கூடியமட்டில் எதிரிகளைத் துரத்தியடித்து ஒரு வீரன் வேலினால் அடிப்பட்டு மாய்ந்தார். உடனே "இராமசிங்க மஹாராஜ்கே ஜேய்! இராமசிங்கமஹாராஜ்கே ஜேய்!" என்று கோஷம் முழக்கிக்கொண்டு இராமசிங்கனை ராஜனாக்கியதற்கடையாளமாய் அவன் தலைக்கு மேலே குடையைப் பிடித்தனர். இராமசிங்கும் தன் உயிரைத் துரும்பாய் எண்ணி, கோபமூண்ட சிங்கம்போல் முன்சென்று தன் சேனையை நடத்தினான்.

இச்சண்டை மும்மரத்தில் நாம் சிறிய மனிதர்களையும் சற்று கவனிக்கவேண்டியதவசியமேயல்லவா? இராஜாக்களும் பிரபுக்களும் சண்டைபோடுவதுபோலவே சாதாரண வீரர்களும் சண்டை செய்தனர். நமது பழைய சினேகிதனான மல்லீக் மகமத்தனக்குப் பகைவரான ஏமாங்கதனையும் சித்திரக்கிரீவனையும் தேடிச்சென்றனன். அவ்விருவரும் தப்பாமல் சண்டைக்கு வருவார்கள் என்றும் அவர்களைத் தன் கையாலேயே கொல்லவேண்டுமென்றும் மல்லீக் எண்ணினான். ஒவ்வொரு முறையும் சண்டை நடக்கும்போதெல்லாம் அவர்கள் தென்படுகிறார்களோ எனத்தேடுவான். இன்று நிச்சயமாய் அவர்களைக் கண்டு சண்டை பிடிப்பதாக நினைத்து அதிக சிரமத்துடன் தன் தேகத்தைக் காப்பாற்றிக்கொண்டு அங்குமிங்கும் அலைந்தான். கடைசியாக ஒரு மூலையில் ஏமாங்கதன் சண்டை செய்வதைக் கண்டு "அடே பயலே வாசல்காரா ஓடியா: சண்டை பிடிக்கலாம்" என்றான். இந்தச் சோற்றுமலையைக்கண்ட ஏமாங்கதன் அடங்காக் கோபத்தோடுஅவன்மேல் எதிர்த்துச்சென்றான். வந்தவனை எதிர்த்துப் போர் செய்துகொண்டே மல்லீக் "இன்னொருத்தன் எங்கடா அடே" என்றான். ஏமாங்கதன் பதில் பேசவில்லை. சித்திரக்கிரீவன் அன்று அச்சேனையில் இல்லை. அவனும் சுலோசனனும்தான் லலிதையை வீரபத்திரன் நகரமான சுகுணபுரத்துக்கு அழைத்துச்செல்ல தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு கோட்டையை விட்டுப் போய்விட்ட

கொடுக்காத இடையன் சினையாட்டைக் காட்டினதுபோல.

னர். ஏமாங்கதன் மல்லீக்குடன் சண்டை செய்ய முடியவில்லை. ஈட்டியால் குத்தும் ஒவ்வொரு குத்தையும் கேடயத்தால் தடுத்துக் கொண்டு தத்தளித்தான். அடுத்த நிமிஷத்தில் கீழே விழுந்து உயிர் விடவேண்டியதுதான் என்று நிச்சயமாய்த் தெரிந்தது. அதற்குள் தெய்வச்செயலாய் ஒரு இராஜபுத்திரன் மல்லீக்கின் அள்ளையில் ஓர் அம்பெய்தான். அவன் அதனால் சற்று சலிக்கவே ஏமாங்கதன் அவன் தலையில் வாளாயுதத்தால் ஒரு அடி கொடுத்தான். அதை விலக்க சிப்பாய் அப்பால் நகர்ந்தபோது அவ்வடி தொடையில் தாக்கியது. மல்லீக் கீழே விழுந்தான். விழும்போது "கவுஸ்! கவுஸ்! எனக்கு வந்து உதவிசெய்யக் கூடாதா? உன்னெதிருக்கா இவன் அன்னிக்கு என்னை அவமானப்படுத்தில்லையா : இன்னிக்கு என்னைக் கீழே தள்ளிட்டானே" என்றான் துருக்க பாஷையில். பக்கத்தில்நின்ற ஒருமஹமதியவீரன் "ஹஸரத்! கவுஸ் முன்னேயே சுல்தானிடத்தில் சண்டைபோட்டு அடிபட்டு விழுந்து மூர்ச்சையடைந்தானே" என்று சொல்லிவிட்டு ஏமாங்கதன்மேற் கிளம்பி அவன் தலையை உடைத்தான். இம்மாதிரி சிறியவர்களும் பெரியவர்களும் தத்தம் வலிமைக்குத் தக்கபடி சண்டைசெய்தனர்.

என்னசெய்தும் இராமசிங்கராஜனால் தாளவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் நல்ல பாம்பின் விஷம்போல் மஹமதியஉக்கிரம் அதிகரித்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் அவ்விஷமுண்ட உயிர்போல் இராஜபுத்திர வலிமை குன்றியது. இராமசிங்கராஜன் இவற்றையெல்லாம் அறிந்து கொண்டான். அவன் மனம் கொதித்தது "இராஜபுத்திரர் வாழ்வு இம்மட்டோ! இனி உதயபுரியின் மஹத்துவம் அடங்கிவிடவேண்டுமோ?" என்று ஒருதடவை ஏங்கினான் தன்னைச்சூழ்ந்து நின்ற பரிவாரங்களும் குடைதாங்கியவனும், கீழே விழுந்தனர். சூர்யசந்திரவம்ச முதல் பரம்பரையாய் வந்த குடை, கீழே சக்கரம்போல் உருண்டு விழுந்தது நான்கு வீரர் ஒருங்கே இராமசிங்கனை எதிர்த்தனர். அவர்களைத் தடுக்கவே, கத்தி ஒடிந்துவிட்டது. சிங்கம் பசுமேல் பாய்வதுபோல் தன் முன்னின்ற துருக்கவீரன்மீது பாய்ந்து அவன் வேலாயுதத்தைப் பிடுங்கிக்கொண்டு மறுபடி அவர்களை மடக்கினான். பின்னும், பலர் மேல் நெருங்கினர். கடைசியாகக் கை ஓய்ந்து, பாரதப்போரில் அபிமன்யு போன்று, களத்தில் பட்டு உயிர் துறந்தான் இராமசிங்க ராஜன்.

எங்கே பார்த்தாலும் தீன் தீன் என்ற சப்தம் கேட்டதே ஒழிய, "ஹர! ஹர மஹாதேவா!" என்ற பிரதியுத்தரம் குறைவுபட்டது. ஆமத்பாக்ஷா ஜயமடைந்தான் என்றாலும், அந்த ஜயம் இலேசில் கிடைத்ததன்று. ஒவ்வொரு இராஜபுத்திரனும், இராஜபுத்திரியும் தான் படுமுன்னர் இரண்டு மூன்று வீரர்களையாவது கொல்லாமல் படவில்லையென்றால், இறந்தவர்களின் தொகை எத்தனையாய் இருக்க வேண்டும்?

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஆர். ராஜசூடாமணி.]

பிரேமாவதி.

கமலம்:—"அண்ணா! நேற்று ஓர் கதை எழுதினாய். அதைப் படித்துப்பார்த்தேன். கதை நன்றாயிருக்கிறது இன்று என்ன கதை எழுதப்போகிறாய்?

சுந்தரம்—"கமலம்! இன்று பிரேமாவதியின் கதையை எழுதப்போகிறேன்."

கமலம்:—"அண்ணா! எனக்கு அந்தக் கதையைச் சொல்ல மாட்டாயா?"

சுந்த :—"கமலம்! இப்பொழுது சொல்லச் சாவகாசமில்லை, ஏனென்றால் நான் அக்கதையை இப்பொழுது எழுதப்போகிறேன்."

கமலம் :—"நல்லது அண்ணா; நீ எழுதிக் கொண்டேபோ; நான் உன் பக்கத்தில் நின்று வாசித்துக்கொண்டே வருகிறேன். நீ கதையை எழுதி முடிப்பாய், நானும் வாசித்து முடிப்பேன்."

சுந்த:—"சென்னப்பட்டணத்தில் நாலைந்து நாளாய் மழை விடாமற் பெய்துகொண்டிருந்தது. வீதியெல்லாம் வெள்ளம்; தண்ணீர்

கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்று.

மடைமடையாய் ஓடியது. மிகுந்த அவசரமான வேலையிருந்தவர்களே குடைபிடித்து முழந்தாள் அளவு கலங்கின ஜலத்தில் இறங்கி நடந்து சென்றனர். வேறு எவரும் புதுத் தெருவழியாகச் செல்லவில்லை. அங்குமிங்கும் ஓயாமல் ஓடும் மோட்டார் வண்டிகளும், ஜட்கா வண்டிகளும் எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டன. பெருமழை நின்ற போதிலும் தூற்றல் நிற்கவில்லை.

அத்தெருவில் கோமதி விலாஸத்தின் கீழ்க் கட்டில், தெருப்பக்கமான ஓர் அறையில் ஒரு குழந்தை வியாதியாய்க் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் தலைப்பக்கமாயிருந்த ஓர் மேஜை மீது மருந்துகளும், ரொட்டியும், பாலும், இன்னும் நோயாளிக்குத் தேவையான வேறு சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த ஓர் தட்டில் அழகான சிறு கதைப் புஸ்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அந்த நோயாளியி னருகாமையில் ஒரு நாற்காலி யிருந்தது.

அக்குழந்தையின்பெயர் பிரேமாவதி. அவள் முகம் மூன்றுமாத ஜுரத்தினால் இரத்தம் சுவறி வெளுப்படைந்திருந்தது. அவளுடைய உதடுகள் உலர்ந்துபோ யிருந்தன. தலை முடி சன்னல் பின்னலாய்ச் சிக்குப்பிடித்துத் தேய்ந்து கழிந்தது. எலும்புகள் யாவும் வெளியே தோன்ற ஆரம்பித்துவிட்டன. கண்கள் ஒளி மழுங்கிச் சிறுத்தன. அவள் ஜன்னலின் வழியாக ஆகாயத்தில் சஞ்சரித்த மேகக்கூட்டங்களையும், அவற்றினின்றும் ஜலம் பூமியில் விழுவதையும், வீதியையும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் ஒற்றைத் தந்தித் தம்புரு ஒன்று கையிலேந்திய பன்னிரண்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் தந்தியை மீட்டிக்கொண்டு கோமதிவிலாஸத்தின் எதிரிலுள்ளஓர்வீட்டில் மழைக்காக ஒதுங்கி நின்றான். அச்சிறுவன் உடை முழுவதும் கிழிந்து மழையில் நனைந்திருந்தது. தலையிலிருந்து நீர் சொட்டிக்கொண்டேயிருந்தது. அவன் தங்கிநின்ற வீட்டின் வாசற்கதவு திறந்திருக்கிறதா என்று பார்த்தான். வெளிப்பக்கம் பூட்டியிராததால் உள்ளே ஆள் இருக்கிறார்களென்று நினைத்துக்கொண்டு பாட ஆரம்பித்துவிட்டான்.

“பண்ணேனுனக்கான பூசை ஒரு வடிவிலே” என்று ஆரம்பித்தான். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்த கிழவர் ஒருவர் ஓடி வந்து “சாண்பயலுக்கு முழம் நீளம் வீணையா? மழை அடிக்கிற அடிக்கு பாட்டு ஒரு கெட்டகேடு; ஓடிப்போடா இவ்விடத்தைவிட்டு; ஜல்தி;” என்று கத்தினார். பையன் அந்த வசை மொழிகளைக்கேட்டுத் திடுக்கிட்டு, மழை பெய்து கொண்டிருந்த தெருவில் நின்று நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்து, எவ்வீட்டில் போய் மழைக்கு ஒதுங்கலாமென்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அச்சம்பவம் முழுவதையும் ஜன்னல் வழியாகக் கவனித்துக்கொண்டிருந்த பிரேமாவதி “அம்மா” என்று கூவினாள். அக்குரலைக் கேட்ட அவள் தாய் ஓடோடி வந்து “என்ன வேண்டுமம்மா? உனக்கு என்ன செய்கிறது?” என்று கேட்டாள்.

பிரேமா :—“ அம்மா! வீதியில் மழையில் நனைந்துகொண்டு அதோ நிற்கிறான் பார் ஒரு சிறுவன். அவனை இங்கே கூப்பிடம்மா !’

தாயார்:—ஆகட்டும்” என்றுசொல்லிவிட்டு வெளியே சென்று அந்தப் பையனைத் தன் வீட்டிற்கழைத்தாள். பையன் வரவே, அவனைத் தன் புத்திரியிடத்திற்கழைத்துச் சென்றாள். அவன் கோலத்தைக் கண்டதும் பிரேமாவின் கண்களில் நீர் ததும்பிவிட்டது. அவள் அவனை அன்புடன் நோக்கி “ஒரு பாட்டுச்சொல்லேன் கேட்போம்” என்றாள்.

பகலெல்லாம் பிச்சை எடுத்தும் அவனுக்கு நாலணாதான் கிடைத்தது. ஒவ்வொரு நாளும் அவன் தன் தாய்க்கு 6-அணா அளிக்க வேண்டும் என்ற விரதம் வைத்துக்கொண்டிருந்தான். அந்த விரதம் இன்று நிறைவேறாமற் போகுமோ என்று கலங்கினான். அதற்காகத்தான் அந்தப் பையன் கொடிய மழையைக் கூடக் கவனியாமல் பிச்சை எடுக்கப் புறப்பட்டான். அவன் ஒருவருஷத்திற்கு முன்பாக திருவல்லிக்கேணிக்கு முதன்முதலாக வந்திருந்தபொழுது அவனுடைய இளம் பிராயத்தையும் இனியகுரலையும்,அவன்உருவத்திலும் நீண்ட தம்புருவையுங்கண்டு மனங்கசிந்துபலர் வேண்டிய அணாக்கள் அளித்தனர். நாளாவட்டத்தில் அவன் பழைய பிச்சைக்காரனாய் விட்டான். பிறகு அவன் பாட்டு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், என்றாற்போலாய்விட்

டது. ஆதலால் அவனுக்கு ஒருநாள் கழிவது நெடியதோர் யுகமாய் முடிந்தது. இந்தச் சிறு குழந்தையின் உபசாரத்தை கேட்ட மாத்திரத்தில் உள்ளம் கனிந்து புன்னகை அரும்பினான் அச்சிறுவன்.

வியாதியால் மெலிவுற்றிருந்த அச்சிறுமியின் முன் வெகு சுகமாய்ப் பாடி அவளைப் பரவசப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் நன்றாய்க் கனைத்துவிட்டு அவன் பாட ஆரம்பித்தான்.

பண்ணேனுனக்கான பூசை ஒரு வடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலருடு நீயே யிருத்தியப்
பனியலர் எடுக்க மனமும்
நண்ணேன் அலாமல் இருகைதான் குவிக்கவெனின்
நாணுமென் னுளநிற்றி நீ.
நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாதலால்
நான் பூசை செய்யல் முறையோ;
விண்ணே! விண்ணாதியாம் பூதமே! நாதமே!
வேதமே! வேதாந்தமே!
மேதக்ககேள்வியே! கேள்வியாம் பூமிக்குள்
வித்தே! அவ்வித்தின் முளையே!
கண்ணே! கருத்தே என்! எண்ணே! எழுத்தே!
கதிக்கான மோனவடிவே!
கருதரிய சித்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

என்று பாடினான். அப்பாடலைக் கேட்டு ஆனந்தமடைந்த பிரேமாவதி "அம்மா! இவனுக்கு இரண்டணாக் கொடு; சாதமும் போடம்மா; பாவம் பரம ஏழை; களைப்புற்றிருக்கிறான். கிழிந்த சட்டையிருந்தால் கொடு அம்மா மா! சின்ன அண்ணா சட்டை, பெட்டியிலிருக்கிறது பார்; கொஞ்சம் கிழிந்திருக்கிறது. அதை அண்ணா போட்டுக்கொள்ள மாட்டேன் என்றான். பரிதாபம்; இவன் சட்டையெல்லாம் மிகவும் நனைந்து போயிருக்கிறது. அந்தச் சட்டையைகொடுத்துவிடு இவனுக்கு" என்றாள். தன் அருமை மகளின் வேண்டுகோளை நிறைவேற்றப் பெரிதும் ஆவல்கொண்ட தாய் "ஆகட்டும் அம்மா! அப்படியே செய்கிறேன். நீ தூங்கு" என்று சொல்லி அச்சிறுவனை அழைத்துப் போய்விட்டாள்.

இவ்வெகுமதிகளைப் பெற்ற சிறுவன் ஆனந்தமாக வழிநடந்து ஓர் ஏகாந்தமான திண்ணையிற் போயுட்கார்ந்து கடவுளை நினைத்து "ஈச்வரா! அந்தச் சிறு குழந்தையின் வியாதியை வெகு சீக்கிரமாக மாற்றி அவளுக்குப் பூரண சுகத்தைக் கொடுக்கமாட்டாயா?", என்று சொல்லி அச்சிறுமியை மனமாற வாழ்த்தினான்.

சிறுவன் வீடு சேர்ந்ததும், தன் தாயிடம் தனக்கு அன்று நடந்த அபூர்வ உபசாரங்களை சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னான். பிரேமாவதியை வாயாரப் புகழ்ந்து பேசினான். தாயும் அச்சிறு குழந்தையை மனமாற வாழ்த்தினாள்.

பிரேமாவதிக்கும் அச்சிறுவனுடைய முகத்தை மறக்க முடியவில்லை. மறுநாள் அச்சிறுவன் பிரேமாவதி தனக்குக் கொடுத்த சொக்காயை அணிந்து, தம்பூரைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்பட்டான். பிரேமாவினுடைய சொக்காயின் மகிமைதானோ! வெளிப்புறப்பட்டது தான் தாமசம் பிச்சை கிடைக்க ஆரம்பித்துவிட்டது, பிரேமாவதியின் வீடுபோவதற்குள்ளாக சிறுவன் 6 அணா முடிந்துவிட்டான். அவன் கொண்ட விரதம் அன்று நிறைவேறிவிட்டது போலும். அன்றும் பிரேமாவதியின் அறைக்கதவின் வெளிப் பக்கத்தில் வந்து நின்று பாட ஆரம்பித்தான். "பண்ணேன் உனக்கான" என்ற பாடலைத் தவிர வேறோர் தமிழ்ப்பாடலும் அவனுக்குத் தெரியாது.

பிரேமா:—"வேறு ஏதாவது பாடல் தெரிந்தால் பாடு" என்றாள்.

சிறுவன் அவள் பாஷையை உணரவில்லை. அவன் தெலுங்கன். அவன் அவள் சொன்னதற்குப் பதிலாகத் தெலுங்கு பாஷையில் "நாக்கு அரவம் தெலியாதண்டீ" என்று சொன்னான். அதன் அருத்தம் அவனுக்குத் தமிழ்ப்பாஷை தெரியாது என்று அவன் கூறியதாகும். இக்குறிப்பை ஒருவாறு தெரிந்துகொண்டு பிரேமா தன் தாயை அழைத்தாள். தாயார் வந்ததும் "என்ன, பிரேமா?" என்று கேட்டாள்.

பிரேமா:—"அம்மா! "பண்ணேன் உனக்கான" என்ற பாடல் ஒன்றுதான் இவனுக்குத் தெரிகிறது. வேறு பாடல் தெரியுமா என்று கேட்டேன். அதற்கு அவன் தெலுங்கில் என்னவோ சொல்லுகிறான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீ கேளேன்" என்று சிரித்துக்கொண்டு சொன்னாள்.

(தொடரும்.)

கொடுத்ததைக் கேட்டால் அடுத்துவரும் பகை.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான், கீ. சி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள். பி.ஏ., எல்.டி.]

பொறுமை

சாஸ்திர விற்பன்னர்களில் சிறந்தவர் ஒருவர் நியூடன்என்பவர். அவர் இருநூறு வருஷங்களுக்குமுன்னமே இங்கிலாந்தில் வாழ்ந்தவர். பூதத்வ சாஸ்திரத்தில் நூதனமான பல விஷயங்கள் கண்டுபிடித்தவர். அவர் தாம் அறிந்தவைகளை எல்லாம் கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்தனர். அவர் அவைகளைப் பதிப்பிக்கவில்லை. ஆகையால் அவைகளை அவர் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவந்தார்.

நியூடனிடம் ஓர் நாய்க்குட்டி இருந்தது. அதன் பெயர் "டயமண்டு." அதன்மீது அவர் மிகவும் ஆசையுடையவரா யிருந்தார்.—ஜீவ காருண்யமும், ஞானமும் பெற்றவர். ஆகையால் அவர் தம்மிடமிருந்தவைகளிடம் மிகவும் அன்புடையவரா யிருந்தனர் என்று சொல்லவும் வேண்டுமோ?

நியூடன் ஒருநாள் தம்மறையில் வேலை செய்துகொண் டிருந்தார். அவர் மேஜையின்மேல் பல கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. இருட்டா யிருந்தபடியால் மேஜையின்மேல் மெழுகுவர்த்தி எரிந்துகொண் டிருந்தது. அப்பொழுது அந்த நாய்க்குட்டி உள்ளே நுழைந்து மேஜையின்மேல் ஏறி குதிக்க ஆரம்பித்தது. மேஜையின் மேலிருந்த மெழுகுவர்த்தி அந்நாயின் ஆட்டத்தினால் கவிழ்ந்துவிட, கையெழுத்துப் பிரதிகளெல்லாம் சில நிமிஷங்களில் பற்றி எரிந்துபோயின. நியூடன் திரும்பிப்பார்த்தார்; தாம் வெகுகாலமாய் எழுதின புத்தகங்கள் பாழாய்ப் போனதைக் கண்ட அவர் மனம் துக்கத்தால் நிறைந்தது. ஆயினும் என் செய்வார்? அவர் கோபத்தை அடக்கி, தம் நாயைப் பார்த்து "ஆ டயமண்டு! நீ செய்த கார்யம் என்னவென்று உனக்குத் தெரிந்திருக்குமானால் நீ இம்மாதிரி செய்திருக்கமாட்டாய்" என்றார்.

அந்தப் பிரதிகளைத் திரும்பி எழுதுவது அவருக்குப் பெருத்த சிரமம். ஆயினும் அவர் தம் கோபத்தை அடக்கினது அவர் பெரும் குணத்தைக் காட்டுகிறது. ஒரு சிறிய நாய் செய்தபோதிலும் அதைத்தண்டியாது, அதன் அறியாமையே அப்படி நடந்ததற்குக் காரணம் என்று நினைத்த நியூடன் மஹானன்றோ? அவ்வித பொறுமை நம்மவருள் எத்தனை பேருக்கு இருக்கும்?

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள், பீ.ஏ.]

அஹல்யாபாய்

(207-ம் பக்கத் தொடர்சி)

இப்படியே, தன் மாமியான கௌதமீபாய் தன் உயர்ந்த குலத்தாலும் பதவியாலும் அதிக கர்வமடைந்து, ஒருவரையும் லக்ஷியம் செய்யாமல், எளிதில் கோபமூட்டப்பட்டவளாய்ப் பொறுமையின்றி, பிறரால் நெருங்கிப் பழக முடியாம லிருந்தாள். அஹல்யாபாய், அவளையும் எப்படியோ தன் வசப்படுத்தி, தன்னிடத்தில் அவளுடைய கஷ்ட சுகங்களை அந்தரங்கமாய்ச் சொல்லி, ஆறுதலடைந்து அவளுக்கும் மல்ஹார் ராவுக்கும் அடிக்கடி நேரும் மனவருத்தங்களையும் கோபதாபங்களையும் சமாதானஞ் செய்வதற்கு ஓர் கருவியாய் எண்ணி, எல்லையற்ற பிரீதியுடன் நடத்தினாள். வருத்தத்தாலும் கோபத்தாலும் மெய் மறந்திருக்கும் சமயத்தில், அஹல்யாபாயைக் கண்டவுடன், முகத்தில் தெளிவும், தன்னை யறியாமல் புன்சிரிப்பும் பிரியமான வார்த்தையும் உண்டாகி, வேறு மனுஷியைப்போல் மாறிவிடுவாள்.

1754-வது வருஷத்தில், கண்டேராவ் தனக்கு விரோதமாய்க் கலகஞ் செய்த ஜாட் ஜாதியாரை அடக்குவதற்காகப் படையெடுத்துச் சென்றார். அங்கே நடந்த யுத்தத்தில் உயிரிழந்தார். அஹல்யாபாயிக்கு, மாலீராவ் என்ற புத்திரனும், மச்சாபாய என்ற புத்திரியும் பிறந்தார்கள். அந்தப் பெண் யசோவந்தராவ் என்றவரை விவாஹஞ் செய்துகொண்டாள். தன் அன்பிற்கும் பக்திக்கும் பாத்திரமான பர்த்தா பரகதியடைந்தபின்பு, தனக்கு இவ்வுலகத்தில் யாதொரு பற்றுமின்றி, எங்கே பார்த்தாலும் சூன்யமாய், எதைப் பார்த்தாலும் துக்க ஸ்வ

ரூபமாகவே தோன்றினபடியால், தானும் பூர்வ ஆசாரத்தை அனுசரித்து அக்கினிபகவானால் அமைக்கப்பட்ட ரதத்தில் தன் பர்த்தாவுடன் ஏறி ஸ்வர்க்கலோகஞ் சென்று, அங்கும் தன் பிராணநாதனுக்கு சுசுருஷை செய்வதையே பரம புருஷார்த்தமாய் நினைத்து இவ்வுலகத்தையும் நீர்மேல் குமிழிபோன்ற ஸுக துக்கங்களையும் வெறுத்து, வானுலகத்திற்குச் செல்லப் புறப்பட்டாள். அப்பொழுது மல்ஹார்ராவ், கோபத்தால் நெருப்புப்பொறிபறக்கும் கண்களிலிருந்து அடங்காத் துயரத்தால் தாரை தாரையாய் கண்ணீர் ஒருநாளும் இல்லாதவிதமாய்ப் பெருக, அஹல்யாபாயைப்பார்த்துக் "குழந்தாய்!என் ஒரே புத்திரனை கண்டேராவ் என்னைவிட்டுப் பிரிந்தான். முதிர்ந்த வயதில் பிள்ளையைப் பறிகொடுத்து ஒண்டியாய்த் தபிக்கிறேன்: அவன் எனக்குச் செய்ய வேண்டிய உத்தரக்கிரியைகளை நான் அவனுக்குச் செய்யலாயிற்று. நீ என்வீட்டிற்கு வந்தது முதல், எனக்கு நாட்டுப்பெண்ணும், என் வயிற்றில் பிறந்த பெண்ணும், என்னைப் போஷித்து யாதொரு குறைவுமின்றிப் பாதுகாப்பதில் பெற்ற தாயுமான நீயும் என்னைக் கைவிட்டால், என்கதி இன்னதென்று நான் சொல்லவேண்டியதில்லை. நீயும் என் மகனும் போகுமிடத்திற்கு என்னையும் என் மனைவியையும் அழைத்துப்போ. நீ இல்லாமல் நாங்கள் ஒரு நிமிஷங் கூட இங்கே உயிர் தரிக்க மாட்டோம். நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியு மென்பதுபோல், நீ இருக்கும் வரையில் உன் அருமையைப்பற்றி நாங்கள் நினைக்கவுமில்லை, இவ்வளவென்று மதிக்கவுமில்லை. "நீ எங்களை விட்டுப் போகிறு யென்று கேட்டவுடன், எங்களுக்கு இவ்வுலகமே பாழாயிற்று. உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் எங்களுக்குப் புத்திரசோகம் மறந்துபோம். குழந்தாய்! எங்களுக்கு இனிமேல் புத்திரனும் புத்திரியும் நீயே. இந்த அகண்டமான ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் செல்வத்தையும் உன் இஷ்டப்படி உபயோகிக்கக் கடவா" யென்று, பிறர் கண்டு நடுங்கும் தொனியைமாற்றி தீனமாய்க் கெஞ்சி வேண்டினர். அஹல்யாபாய் தன் மூத்தோரின் சொல்லை ஈசுவர நியமனமாய் எண்ணி தன் கணவனுடன் உடன்கட்டை ஏற நினைத்த பிடிவாதத்தை மாற்றி, மறுபடியும் இல்வாழ்க்கையை ஒப்புக்கொண்டாள்.

மல்ஹார்ராவ் தன் ராஜதானியில் இருப்பதே இல்லை, எப்பொழுதும் தூரதேசங்களில் படையெடுத்துச்சென்று பகைவருடன் போர் புரிவதும், நாடு நகரங்களைப் பிடிப்பதுமே வேலையா யிருந்தார். கௌதமிபாய்,தன் புத்திரன் இறந்ததுமுதல், உலகத்தையே துறந்து விரதம் உபவாஸம் நியமம் பூஜை புண்ய தீர்த்த யாத்திரை ஜபம் தானம் முதலியவைகளில் மனதைச் செலுத்தி, காலங்கழித்து வந்தாள். ஆகையால், ராஜ்ய கார்யங்கள் யாவும் அஹல்யாபாயின் தலையில் சுமந்தன. ராஜ்யத்தின் வரவு செலவு கணக்குகளைச் சரியான காலங்களில் கொடுக்கச் செய்து, வருமான காரணங்களை விருத்திசெய்து, செலவாகும் இனங்களைக் குறைத்து, பொக்கிஷத்தில் ஏராளமான திரவியம் வருஷாவருஷம் மிகுந்திருக்கச் செய்தாள். மல்ஹார்ராவ் தன் யுத்த கார்யங்களுக்குப் போதுமான திரவியத்தை சரியான காலத்தில் அனுப்புவதையே கவனித்துக் கொண்டிருந்தார். ராஜ்யத்திலுள்ள உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும் மாற்றுவதும் குறைப்பதும் தள்ளுவதும் அவர்களுக்கு வேலையிடுவதும் நியாய ஸ்தலங்கள், வியாபாரம் கைத்தொழில், சாகுபடி, நீர் பாய்ச்சல், அரங்க வேலைகள், தர்ம ஸ்தாபனங்கள், படிப்பு முதலிய எல்லாத் துறைகளிலும் தன் கவனத்தைச் செலுத்தி, ஒவ்வொன்றிலும் நடக்கும் காரியங்களைத் தான் அடிக்கடி பரிசீலனை செய்து, எங்கும் நடக்கும் விஷயங்களைத் தன் தூதர்களாலும், சாரர்களாலும், வேவுகாரர்களாலும் உடனே அறிந்து, எங்கும் கண்ணாகவும் எங்கும் காதாகவும் அரசனுடைய ஆக்ஞையைச் செலுத்துவதில் எங்கும் கையாகவும், பகவானைப்போல் விச்வரூபியாய் விளங்கினாள். முன்பு கண்டேராவ் செய்துவந்த ராஜ்ய காரியங்கள் யாவும் இப்பொழுது அஹல்யாபாயைப் பொறுத்தன. இந்துஸ்தானத்தில் முஸல்மான்களுடைய ஆளுகையையும் மொகலாயர்களின் ராஜ்யத்தையும் அகற்றி, பூர்வீகமாயுள்ள ஹிந்து அரசாக்ஷியை ஸ்தாபிப்பதையே தன் கடமையாய்க் கொண்ட சிவாஜி மஹாராஜாவின் உத்தேசத்தை, அவருக்குப் பின்வந்த பாலாஜீ விச்வநாத்,பாஜிராவ்,பாலாஜீ

பாஜிராவ் முதலிய பேஷ்வாக்கள் பூர்த்திசெய்யப்பார்த்து, வெகுதூரம் காரியசித்தி யடைந்தார்கள். ஆனால், மஹாராஷ்டிரத் தலைவர்களுக்குள் பொறாமையாலும் கர்வத்தாலும் கலகமுண்டாகி ஒற்றுமை குறைந்து, பாணிப்பட்டில் 1761-ல் நடந்த மூன்றாவது மஹா யுத்தத்தில், ஆமத்ஷா அப்தல்லி என்ற மகம்மதியத் தலைவனால் மஹாராஷ்டிர சைன்யங்கள் முற்றிலும் தோல்வியடைந்து, மூலைக்கு மூலை சிதறி ஓடின. அதற்குப் பிறகு மஹாராஷ்டிர அதிகாரமே இந்தியாவில் தலையெடுக்கக் காரணமில்லையென்று எல்லோரும் நினைக்கும்படி யாயிற்று. ஆயினும், சிவாஜியின் வம்சத்தாரின் கையிலிருந்து நழுவின செங்கோலைப் பேஷ்வாக்கள் கைக்கொண்டு, அரசாண்டதுபோல், பேஷ்வாக்களின் அதிகாரம் சிதறி மலினமடைந்தபொழுது, அவர்களுடைய கையிலிருந்து நழுவின செங்கோலை அவர்களுடைய போர்வீரனும் நண்பனுமான மல்ஹாரராவ் ஹோல்கார் கைக்கொண்டு, சிவாஜி மஹாராஜாவின் உத்தேசத்தைப் பூர்த்தி செய்ய நினைத்து, ஆர்யாவர்த்தமெங்கும் ஹிந்து சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உள்ளாகவேணுமென்று ஓயாத முயற்சி செய்தான். மனிதர்களால் ஸாத்யமில்லாத காரியமாய்த் தோன்றினும், மல்ஹார் ராவ் அஞ்சாத நெஞ்சமுடைய தீரனாகையால், இடைவிடாமல் யுத்தஞ்செய்து, ஜயலக்ஷ்மியின் கடாக்ஷத்தைப் பெற்று, வெகு சீக்கிரத்தில் குஜராத், லாகூர், மூல்தான் முதலிய ஸ்தலங்களையும், முடிவில் டில்லிமா நகரத்தையும் வசப்படுத்திக் கொண்டான். அங்கே ஆண்டுகொண்டிருந்த ஆமத்ஷாவை ஸிம்மாஸனத்திலிருந்து விலக்கி, தனக்கு நண்பனான ஆலம்கிர் என்பவனைப் பாதுஷா வாக்கினான். இப்படித் தன் மனோரதங்கள் ஏறக்குறைய நிறைவேறிவரும் ஸமயத்தில், எண்ணிறந்த சத்துருக்களின் சூழ்ச்சிகளைக் கலைத்து, எண்ணிறந்த போர்க்களங்களில் சத்துருக்களைச் சிதறவடித்த வீரஸிம்ஹம், ஸர்வலோக சத்துருவும் தடையற்ற வீரனுமான காலனுடன் போர்புரிந்து அபஜயமடைந்து, அவனால் சிறையாக்கப்பட்டு, உயிர் துறந்தான்.

உயிருக்குயிரான புருஷனையும், தாயும் தகப்பனுமான மாமனையும் பறிகொடுத்து, அகண்டமான ராஜ்யத்தை ஆள்வதற்கும், பிரசித்தி பெற்ற போர்வீரர்களால் விளங்கும் சைன்யங்களை நடத்துவதற்கும், தகுந்த தலைவனில்லாமல், சத்துருக்களாலும் பொறாமை குடிகொண்ட மித்திரனைப் போன்றவர்களாலும் சூழப்பட்டு, ஆயிரம் புலிகளுக்கு நடுவில் அகப்பட்ட பெண்மானைப்போல் அனாதையாய் நிற்கும் அஹல்யாபாயின் நிலைமையைச் சொல்லவும் முடியுமோ? ஆயினும், எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும், எவ்வித ஆபத்துகள் தடுத்தாலும், ஹோல்கார் ராஜ்யத்தைக் காப்பாற்றி, அதன் கீர்த்தியும் அதிகாரமும் செல்வமும் குறைவற வளரும்படி சகல ஏற்பாடுகளும் செய்வதே தன் கடமையென்று நிச்சயித்து, அஹல்யாபாய் தன் துக்கங்களை மறந்து, தன் காலத்தையும் புத்தியையும் சக்தியையும் அந்தப் பெரிய காரியத்தை நிறைவேற்றுவதற்காக தத்தஞ் செய்தாள். மாலீராவ் என்ற தன் புத்திரனைப் பட்டத்தில் வைத்து முடி சூட்டி, தான் அவனுக்குத் துணையாயிருந்து ராஜ்ய வியவகாரங்களை நடத்தி வந்தாள். அஹல்யாபாயின் மனவுறுதியையும் தன்னயம் பாராட்டாத லோகோபகார சிந்தையையும் முற்றிலும் பரீக்ஷிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவரைப்போல், ஈச்வரன் அவளுக்கு ஓர் பெருங் கஷ்டத்தை விளைவித்தான். உகிரச்சுற்றின்மேல் உலக்கை விழுந்ததுபோலும், அம்பு பாய்ந்த காயத்தில் காய்ச்சின மழுதுளைத்ததுபோலும், புருஷனையும்மாமனையும் இரையாக்கினகாலன் மிகுந்திருந்த புத்திரனையும் அபஹரித்தான். ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்த ஒன்பதாவது மாதத்தில்மாலீராவ் பரகதியடைந்தான். முட்டநனைந்தவர்களுக்குக் குளிரில்லையென்பது போலும், தலைமேலோடிய வெள்ளம் சாணோ முழமோவென்று விசாரிப்பதில் பயனில்லையென்பதுபோலும், இவ்வித கஷ்டங்களையே அனுபவிப்பது தனக்கு ஸஹஜமென்றும், தன் கர்மகதியென்றும், பரம காருணிகனான ஸர்வேச்வரன் எதையும் நமது நன்மைக்காகவே செய்கிறானென்றும், நமது அல்ப ஞானத்தால் அவருடைய திருவுள்ளத்தை அறிய முடியாமல் வருந்துவதும், தெய்வத்தை நொந்துகொள்வதும் புத்தியின்மையென்றும் நன்கறிந்த அஹல்யாபாய், தான் அந்த ஸமயத்தில் இன்னது செய்யவேண்டுமென்று ஆழ்ந்து யோசித்து, அதிசீக்கிரத்தில் அதற்குத் தகுந்த

ஏற்பாடுகளைச் செய்துவிட்டாள். தன் வம்சத்தைச் சேர்ந்த ஒரு பையனை ஸ்வீகாரஞ்செய்துகொண்டு, அவனைப் பட்டத்தில் வைத்து, தான் ராஜ்யத்தை ஆளுவாளென்று நினைத்தவர் சிலர், ஆண்பிள்ளைத் துணையில்லாமல், ஒரு ஸ்திரீ அகண்டமான ராஜ்யத்தை ஆளத் துணிய மாட்டாள்; பிரஸித்திபெற்ற மந்திரியையாவது ஸேனாபதியையாவது அரசனாகச் செய்து, வைதிக கர்மங்களிலும், தானதர்மங்களிலும் தேவ பூஜையிலும் புண்ய க்ஷேத்திர யாத்திரைகளிலும் புத்தியைச்செலுத்துவாளென்று நினைத்தவர் சிலர். ஆனால், இந்தூர் ராஜ்யத்திற்குத் தகுந்தயோக்கியதையுள்ள ஒருவனை அரசனாகநியமிக்காமல், ராஜவம்சமென்ற அபிமானத்தை மாத்திரம் மேற்கொண்டு, ஓர் சிறுவனைப் பட்டத்தில் வைப்பதா லுண்டாகும் அபாயங்களை நன்கறிய, அஹல்யாபாயிக்கு ஸமீபத்தில் கிடைத்த அவகாசத்தை அவள் மறந்துவிடவில்லை. அவளுடைய வயிற்றில் பிறந்தவனும் கண்டேராவின் புத்திரனும், மல்ஹார்ராவின் பேரனுமானமாலீராவ், குணங்களிலும்நடத்தையிலும் அவர்களைக் கொஞ்சமேனும் அனுசரிக்கவில்லை. அவர்களுடைய வீர்யமும் பராக்கிரமமும் பெருந்தன்மையும் இச் சிறுவனிடத்தில் தலைகாட்டவில்லை. அவர்களிடத்தி லில்லாத முரட்டுப் பிடிவாதமும், இரக்கமின்மையும், கொடுஞ் செயல்களில் சந்தோஷமும், அல்ப விஷயங்களில் மனதைச் செலுத்திக் காலத்தை வீணாக்கும் பழக்கமும், வயது ஜாதி அந்தஸ்து ஐசுவரியம் திறமையென்ற பேதமில்லாமல் எல்லோரையும் அவமதித்து குரூரமாய் உபத்திரவிக்கும் ராக்ஷஸ ஸ்வபாவமும், நல்லோரையும், திறமை வாய்ந்தவர்களையும் விரோதித்துக் கொள்ளும் சக்தியும், எப்படியோ அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. ஏதோ ஒரு துர்த்தேவதை அவனிடத்தில் ஆவேசங்கொண்டு, மனதால் நினைக்க வொண்ணாத கொடுமைகளைச் செய்யத் தூண்டிவிட்டது போலும்! வேறு குலத்தில், வேறு வம்சத்தில் பிறந்த பிள்ளைகளிடத்தில் அஹல்யாபாயிக்கு எப்படி நம்பிக்கை உண்டாகும்? ஆகையால், சிம்மாஸனத்தில் வேறொருவரையும் வைப்பதில்லையென நிச்சயித்துத் தன்னைவிடத்தகுந்த வேறொருவர் கிடைக்கும்வரை தானே ராஜ்யத்தை ஆண்டுவரத் தீர்மானித்தாள்.

இப்படியிருக்கையில், அவளுடைய மந்திரிகளில் ஒருவனான கங்காதர யசோவந்தனென்பவன், யாராவது ஒரு குழந்தையை சிம்மாஸனத்தில் வைத்துத் தான் ஸர்வ அதிகாரத்தையும் ராஜப்பிரதிநிதியாயிருந்து நடாத்தி அஹல்யாபாயை ஜீவனாம்சம் கொடுத்து ஓர் மூலையில் உட்கார வைக்கலாமென்று வெகுகாலமாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். காலக்கிரமத்தில் தன் அதிகாரத்தை பலப்படுத்திக் கொண்டு சேனைகளையும் பிரஜைகளையும் பல உபாயங்களால் வசமாக்கிப் பேருக்காக வைத்திருந்த குழந்தையை யமலோகத்திற்கனுப்பி, அஹல்யாபாயை ஆயுள்வரையில் சிறையிலடைத்துத் தானே இந்தூர் ராஜ்யத்தை ஆண்டு வரலாமென்று ஆகாசக் கோட்டை கட்டியிருந்தாலு மிருக்கலாம். ஓர் ஸ்திரீ ராஜ்யத்தை ஆளும் காலத்தில் நேரக்கூடிய ஊழல்களை மறைவாகக்கொண்டு, தங்களுடைய ஜமீன்களையும் செல்வத்தையும் அதிகாரத்தையும் விருத்தி செய்யலாமென்று எண்ணினவர் பலர். ஆனால், அஹல்யாபாய் ஜனங்களின் ஸ்வபாவத்தையும் நோக்கங்களையும் பல வருஷங்களாய்ப் பரீக்ஷித்து வந்தவளாகையால் தன் தயவை ஸம்பாதித்துப் பெரிய பதவிகளை அடைய விரும்பித் தன்னை அளவுக்கு மிஞ்சி உபசாரஞ்செய்து புகழும் வஞ்சகர்களின் வலையில் சிக்காமல், எந்தெந்த வேலைக்கு யார்யார் தகுந்தவரோ, அவனையே தெரிந்தெடுத்து, ஜாதி மதம் வயது அந்தஸ்து பழக்கம் அபிமானம் முதலியவைகளைக் கொஞ்சமேனும் கவனியாது, வேலைத்திறமையையும் கண்யத்தையுமே நோக்கிப் பல தேசங்களிலுமிருந்து நிபுணர்களைத் தருவித்து நியமித்துத் தனத்தாலும், மரியாதையாலும் ஆதரவாலும் கௌரதையாயும் பிரியமாயும் நடத்துவதாலும் அவர்களிடத்தில் பூர்ண விச்வாஸம் வைத்துஅவர்களை அடிக்கடி உபத்திரவிக்காம லிருப்பதாலும், தகுந்த ஸமயங்களில் அவர்களைப் புகழ்ந்து உத்ஸாகப்படுத்தியும் சாந்தமாய்க் குறைகளை எடுத்துக்காட்டி மிருதுவாய் வற்புறுத்துவதாலும், தன்னிடத்தில் அவர்கள் எல்லையற்ற ராஜவிசுவாஸமும் பக்தியும் பிரீதியும் நம்பிக்கையும் வைத்து, உடல் பொருள் ஆவியையும் ஸந்தோஷமாய் ராஜகார்

யத்தில் தத்தம் செய்யும்படி, கௌரதை அன்பென்ற ரத்தினஹாரங்களால் அவர்களைத் தனக்குக் கட்டுப்படுத்தினாள். பிரஜைகளை ஏழை நொந்தவனென்று பாராமல், அகப்பட்டவரையில் கழுத்தில் ஈரச் சவுக்கத்தை வைத்து அறுத்து ஒரு சொட்டு ரத்தங்கூட பாக்கியில்லாமல் கறக்கும் மந்திரிப்புலிகளை விலக்கி, திறமையும் ஜீவகாருண்யமும் வாய்ந்த பெரியோர்களையே அப்பதவிக்கு நியமித்தாள். பேராசைகொண்டவர்களும் கலகக்காரர்களும் பேச்சுமூச்சுவிட இடமில்லாமல், தப்பு ஸ்தோத்திரத்தாலும்வஞ்சகத்தாலும்அஹல்யாபாயை வசப்படுத்த முடியாதென்றறிந்து, வேறு வழியில்லாமல் அவளைப் பலாத்காரமாய் பட்டத்திலிருந்து விலக்கச் சதியாலோசனை செய்தனர்.

இப்படிப்பட்டவர்களின் தலைவனே கங்காதர யசோவந்தனென்பவன். ராஜ புரோகிதனும் மந்திரியாயுமிருந்த சலுகையால் அவன் அடியிற்கண்டவாறு அஹல்யாபாயிக்குக் கடிதம் எழுதினான். "நீயோ கேவலம் பெண்பிள்ளை. இந்தப் பெரிய ராஜ்யத்தை ஆளமுடியுமென்ற பிரமைகொண்டு, உன்னால் சுமப்பதற்கரிய பாரத்தைத் தலையில் ஏற்றுக்கொண்டு தத்தளிக்கிறாய். நீயும் கெட்டு, ராஜ்யத்தையும், பாழாக்குவாய். மேலும், முதிர்ந்த வயதான உனக்கு இக்காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய வைதிக தர்மங்களும் கெடும். மேலும் இந்தூர் ராஜ்யத்திலுள்ள பிரபுக்களும் வித்வான்களும் சுத்தவீரர்களும் மந்திரிகளும், கேவலம் ஓர் பெண்பிள்ளைக்குக் கைகட்டி நின்று தலைவணங்குவார்களா ? உன் பந்துக்களுக்குள் யாராவது ஒரு பையனை முடிசூட்டி, ராஜ்ய பாரத்தை என்னிடத்தில் ஒப்புவித்து, நற்கதியடையவேண்டிய ஸாதனங்களைத் தேடு. வயதாலும் அனுபவத்தாலும், அறிவாலும் ராஜவம்சத்தில் வெகுநாளாய் வைத்திருக்கும் விச்வாஸத்தாலும், இந்தப் பெரிய வேலைக்கு என்னைவிடத் தகுந்தவன் உனக்குக் கிடைப்பது அரிது. மேலும், நீயோ ஸ்திரீ, வயது சென்றவள், புருஷனையும்,மாமனையும், மகனையும், உன் உயிரிருக்கும்பொழுதே பறிகொடுக்கும் மஹாபாபத்தைச் செய்தவள். உனக்கு ராஜ்யமேன், ஐசுவர்யமேன், அதிகாரமேன் ? ஸ்திரீகளுக்குரிய அடக்கத்தையும் வணக்கத்தையும் மரியாதையையும் விட்டுப் புருஷர்கள் செய்யத்தகுந்த கார்யங்களைச் செய்யத் துணிவதால் பெரும் பாபமே விளையும். இவ்வளவு சொல்லியும் நீ கேளாவிடின், இந்த ராஜ்யத்திலுள்ள யாவரும் உன் ஜன்ம சத்ருக்களாவார். உனக்கு யார் துணை ? கார்யம் மிஞ்சுமுன், தக்க ஏற்பாடுகளைச் செய்"யென்றான்.

அவனுடைய பலத்தையும் தைர்யத்தையும் சக்தியையும் நன்றாயறிந்த மஹாராணி, சற்றும் அஞ்சாமல், "நான் மஹாராஜாவின் நாட்டுப்பெண்; மஹாராஜாவின் பார்யை; மஹாராஜாவின் தாய். இப்படியிருக்க, வேறொருவனுடைய அதிகாரத்திற்கு என்னை உட்படுத்துவது அழகல்ல. மதசம்பந்தமான விஷயங்களில் உமது வார்த்தையும் உபதேசமும் எனக்குப் பிரமாணமே. அதை நான் மீறத் துணியமாட்டேன். ஆனால், பேராசைகொண்டு, உமது வயதிற்கும் ஜாதிக்கும் படிப்பிற்கும் முற்றிலும் தகாத கார்யத்தில் மனதைச் செலுத்தி என்னை வஞ்சித்துப் பயமுறுத்தப் பார்த்தால், அது எவ்விதத்திலும் பலிக்காதென்பதை நன்றாய் அறியலாம். உம்மால் செய்யக்கூடியதை நான் தடுக்கமுடியாது. ஆயினும், நியாயமும் ஸத்யமும் எந்தக் கக்ஷியிலிருக்கிறதோ, அதே ஜயிக்குமென்று நம்பியிருக்கிறேன்" என்று பதிலளித்தாள்.

கங்காதரன் அதைக்கண்டு கோபங்கொண்டு முன்யோசனையில்லாமல் குரங்குதானுங் கெட்டுச் சந்திர புஷ்கரணியையும் கெடுத்ததுபோல், தனக்கு அஹல்யாபாயிடத்திலுள்ள த்வேஷத்தாலும், தன் எண்ணங்கள் நிறைவேறவில்லையென்ற ஆத்திரத்தாலும் தன் கபடத்தை அவள் கண்டுபிடித்தாளேயென்ற வெட்கத்தாலும், அக்காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யத்திற்குத் தலைவனாயிருந்த பேஷ்வாவுக்கு ரஹஸ்யமாய் ஸமாசார மனுப்பி, "இந்தூர் ராஜ்யத்தில் தகுந்த நாதனில்லை. கேவலம் கையாலாகாத ஓர் பெண்பிள்ளை, ராஜ்யத்தை ஆண்டு வருவதாயெண்ணி அபிஷேகித்து, பிரஜைகளையும் சேனையையும் தனக்கு விரோதமாக்கிக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் மிகவும் அதிருப்தியடைந்து, வேறு தகுந்த அரசன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நானும், மந்திரிகள் முதலியோரும் உதவிபுரிவோம்" என்று எழுதியனுப்பினான்.

கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியா ?

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

ஸர் சங்கரன் நாயர்.

மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருந்து முன்னுக்கு வந்தவரும், சென்னை ஹைகோர்ட்டில் முதல் இந்திய அட்வோகேட் ஜனரலாக விருந்து அப்பதவிக்கு இந்தியர்கள் எவ்விதத்திலும் யோக்கியதை யுடையவர்களெனத் தெளிவாகக் காட்டினவரும், சமீபத்தில் இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையின் அங்கத்தினராகவுமிருந்த ஸ்ரீமான் ஸர் சங்கரன் நாயர் லண்டன்மா நகரிலுள்ள இந்திய ஆலோசனை சபையின் (India Council) அங்கத்தினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரென்பது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. அவர் சிறந்த தேசாபிமானியாதலால், இப்புதுப் பதவியிலும் நம் தாய் நாட்டிற்காக முன்போலவே உழைப்பாரென நம்பியிருக்கிறோம்.

* * *

அரிசி விலை.

சென்ற 4, 5 வருஷங்களைவிட இவ்வருஷம் நல்ல மழை பல இடங்களில் பெய்திருந்தும், அரிசியின் விலையோ குறையக்காணோம். மழையில்லாக் காலத்தில் ரூபாவுக்கு $3\frac{1}{2}$ படி கிடைத்த அரிசி இப்பொழுது 2 படி கிடைப்பதே அரிதாகிவிட்டது. சுவரை வைத்துக்கொண்ட பிறகே, சித்திரமெழுத முடியுமாதலால், நம் நாடு முன்னேற்க வேண்டுமாயின், நம்மவர், ஆகாரத்திற்காகவாவது [illegible]ப்படாதிருக்க வேண்டுவது அவசியமென அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்த அரிசி விலையைக் குறைக்க துரைத்தனத்தாரும், தேசாபிமானிகளும் முன் வராவிடில், ஏழைகள் பாடு அம்பலந்தான் என்பதற்கையமில்லை. இனியாவது இவர்கள் விழித்துக் கொள்வார்களோ?

* * *

இலங்கை ஜாதீய மஹாநாடு.

சென்ற மாதம் இலங்கைத் தீவில் நடைபெற்ற மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானங்களுள் சில வருமாறு:—(1) இலங்கைத் தீவிற்கு ஓர் சர்வ கலாசாலையும், ஒவ்வொரு முக்கியப் பட்டணத்தில் ஒரு காலேஜும் வேண்டும்; (2) வறுமையால் கஷ்டப்படும் இலங்கை வாசிகளுக்கு அரிசி குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி தகுந்த ஏற்பாடுகளைத் துரைத்தனத்தார் செய்யவேண்டும்; (3) பன்னிரண்டு வயதிற்குக் குறைந்த குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாததோடு, அவர்களுக்குக் கட்டாயப் படிப்புக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்; (4) தொழிலாளர் சற்று சிரம பரிகாரம் செய்யும்பொருட்டு, வேலைசெய்யும் நேரம் குறைக்கப்பட வேண்டும்; (5) கர்ப்பஸ்திரிகளைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்; (6) ஸ்திரீகளுக்கும் புருஷர்களைப் போலவே ராஜாங்க விஷயங்களில் ஓட் (Vote) சுதந்தரம் கொடுக்கப்படல் வேண்டும்.

* * *

ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார்.

சிறந்த தேசாபிமானியும், சண்டை நடைபெற்றபோது மன்னர்பெருமானால் சீமைக்கு அழைக்கப்பட்டவரும், ஹிந்துப் பத்திரிகையை பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக மிகவும் ஊக்கத்துடனும் திறமையுடனும் நடத்தி வருபவருமான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கய்யங்காரின் அறுபதாம் ஆண்டு நிறைவு வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. நம்மவர் எல்லோராலும் கொண்டாடப்பட்ட ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் இன்னும் பலகாலம் சுக ஜீவியாயிருந்து, நம் நாட்டிற்குழைக்க ஈசுவரன் அருள்புரிவாராக!

பஞ்சரத்தினம்.—மணாளனைத் தவிர மற்றொருவரை மனத்திலும்நாடாத ருக்மிணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் லங்கையிற்சிக்கி கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த ஸீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவுமெண்ணிக் காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக்கொண்ட சகுந்தலை முதலிய 5 புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. படங்களுடன், அ.12.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.